சுதேசமித்திரன்



ஒரு புராதன வைத்தியம்
இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது
IMPORTANT TO MOTHERS
WOODWARD'S
GRIPE WATER
keeps baby well
1-WW 111-111
W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.

வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை கொடுக்கும்

देवामृतम्
'भीम-वीर'
शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD — Nectar of Life — MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 8—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப் பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி **R. M.** நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O (தென் இந்தியா)

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500. 1st. Quality Spade Clover Beedies. 500
SPADE CLOVER BEEDI
M. MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனர் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை அது கூந்தல் வேர்களுக்கு தேவையான இயற்கைபோஷாக்குகளை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்

எங்கும் கிடைக்கும். *ஒரு புட்டி விலை அணா 15.*

ஹிந்தி ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச் சிறந்த கூந்தல் டானிக். தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம் தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்குகளை தயாரிப்பது பற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுன்னர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப் போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப்பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்.

சுஷில் குமார்:—நான் ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—என் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் எனக் கண்டேன். ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்கச் சிறந்த டானிக்.

கண்ணாம்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டேயிருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப்பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது. அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியையூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும், புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நிய நாடுகளிலிருந்துவரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடா சிறந்ததுஎன்பதே என் அபிப்ராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடா உபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக் என்று நிரூபித்துவிட்டது.

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம், அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்கு ரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷிமிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில் அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் வெகு நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன், அது கூந்தலவளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

ஏ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

சக்தி ஆரூடம்!

நீலகிரி பாரஸ்டு இலாகா மானேஜர் (Retd.) Sri. சாயிராம் T. V. .சாமி 30-11-48ல் எழுதுகிறார்:—"தங்கள் ஜோதிடத்தில் எனக்கு அபார மதிப்பு. தங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை."

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8/ 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. வி. பி. பி தனி.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஜோதிடாலயம் விருத்தாசலம் P. O. (S. I.)



கிருஸ்துமஸ் & பொங்கல்

மாதர்களின் உள்ளத்தை மகிழ்விப்பது எங்கள் மனோரம்மியமான

ஜோதி பட்டு ஆடைகள்.

உங்கள் திருப்தி-எங்கள் சந்தோஷம்

நம் சொந்த கைத்தறியில் ஸ்பெஷல் தயாரிப்பு. நவ நாகரீகத்திற்கு ஏற்ற நவீன தினுசுகள். கண் கவரும் ரம்மியமான பல வர்ணங்களில் 5 முதல் 9 கெஜம் வரை பட்டு புடவைகள், பட்டு சோமன், அங்கவஸ்திரங்கள், சர்டிங் தினுசுகள்.

6 கெஜம் உயர்தர கலர்புடவை 1-க்கு ரூபா 12. விலைக்கேற்ற தினுசுகள் கிடைக்கும்.

நாணயமான வியாபாரிகளும் ஏஜண்டுகளும் தேவை.

JOTHI FABRICS,
KOTTAR - TRAVANCORE.

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸ்ரீ [illegible]

ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்--செகந்திராபாத்

பெஜவாடா — மதுரை.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சுரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	வில்வி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனா	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S W.) 4, Hospital St. **Calcutta 13.**

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம். காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்கியம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3-8.

ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ், உறையூர் — திருச்சி

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்

S.A.H.

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,

கோட்டை, சேலம். S.I.R.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும் தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது: வாசனையுள்ளது. மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்.

விஜயா கெமிகல் & டாய்லட் ஒர்க்ஸ்,

15, கிளெமன்ஸ் ரோட்,

(ராக்ஸிக்குப் பின்புறம்.)

புரசைவாக்கம், மதராஸ் 7.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் **விலை ரூ. 2-8-0**

தபாற்செலவு பிரத்யேகம்.

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0 (தபால் செலவு பிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

A. B. C. Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்:

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.

4 வது வாரம்

எங்கும் அமோகமான வரவேற்பு

சென்னையில் ஏக காலத்தில்
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும் முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது.

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

T. R. மகாலிங்கம்
அஞ்சலிதேவி
நடித்தது.

★

இன்ப கானம்
இனிய நடனம்
தெவிட்டாத கதைப்போக்கு
இடைவிடா நகைப்பூட்டும்
ஹாஸ்யம்.

★

டைரக்ஷன் :
T. R. சுந்தரம் B.A.B.Sc. (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ்
லிமிடெட்.
சேலம் & மதுரை.

சுதேசமித்திரன்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ மார்கழிமீ 19உ ★ 1949-௵ ஜனவரிமீ 2உ No. 49

சீன நெருக்கடி

மார்ஷல் சியாங் சர்க்காரின் முடிவு காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வப்போது சற்று தணிவாயிருப்பினும் சீனக் கம்யூனிஸ்ட் படைகள் பல முனைகளிலும் முன்னேறும் வேகம் பிரமிக்கத்தக்கது. தலைநகரான நாங்கிங்கை நோக்கி அவை விரைந்துகொண்டிருக்கின்றன, இன்னும் அத்துருப்புகளை எதிர்த்து நிற்க சியாங் சர்க்கார் முஸ்தீப்பு செய்துகொண்டிருக்கலாம். இரண்டொரு இடங்களில் அவர்கள் கம்யூனிஸ்ட் படைகளைத் திருப்பியடித்திருக்கவும்கூடும். ஆனால் இதன் மூலம் கம்யூனிஸ்ட் முன்னேற்றம் ஓரளவு தாமதப்படலாமேயன்றி அதை அடியோடு தடுத்துவிடுவது சாத்தியமாகத் தோன்றவில்லை. தலைநகரைக் காக்கப் போராடுவதில் சியாங் சர்க்கார் எவ்வளவுதான் உறுதி தெரிவித்தபோதிலும், இதே சமயத்தில், நாங்கிங்கைக் காலி செய்ய சீன அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருவதை யாரும் அசட்டை செய்வதற்கில்லை.

சீன சர்க்கார் குடிமுழுகிப் போகும் நெருக்கடியிலிருப்பது வெட்ட வெளிச்சம். அவர்கள் மீள்வதற்கான அறிகுறியெதையும் காணவில்லை. அமெரிக்கரிடமிருந்து உடனடியாகப் பெருவாரியான உதவி கோரி அவர்கள் ஒன்றன் பின்னொன்றாகப் பல அவசர முறையீடுகள் விடுத்துப் பார்த்தனர். நெருக்கடியின் தன்மையை அமெரிக்க சர்க்காருக்கு நேரில் உணர்த்த மார்ஷல் சியாங்கின் மனைவி அமெரிக்காவுக்கும் சென்றார் இதோடு, சீனப் புனருத்தாரணத்துக்கு உதவ அமெரிக்க சர்க்கார் ஏற்கெனவே மேற்கொண்டிருந்த திட்டமும்இப்போது ரத்தாகிவிட்டது. சியாங் சர்க்காரை அடியோடு கைவிட அமெரிக்கா முடிவு செய்துவிட்டதென்றே தோன்றுகிறது.

ஆனால், அமெரிக்கா மேற்கொண்டு சீன சர்க்காருக்கு உதவி மறுக்க உருவான பல காரணங்கள் உண்டு. சியாங் சர்க்காருக்குச் சப்பைக் கட்டுக்கட்ட இதுவரை அவர்களுக்கு அமெரிக்கா அனுப்பி வந்திருக்கும் தளவாடங்கள் அபாரம். எனினும் அவர்கள் கம்யூனிஸ்ட் முன்னேற்றத்தை தடுக்கமுடியவில்லை. அதோடு சீன சர்க்காரைச் சேர்ந்த படைகள் சாரி சாரியாக தங்களிடமுள்ள தளவாடங்களுடன்கம்யூனிஸ்ட் ராணுவத்திடம் சரணடைந்து வந்திருக்கின்றன. இந்நிலையில் சீன சர்க்காருக்கு மேற்கொண்டு உதவுவது உண்மையில் சீன கம்யூனிஸ்டுகளுக்கே உதவுவதாகும் என்று அமெரிக்கா எண்ணுவது இயற்கையே. மேலும் சீன சர்க்காருக்குத் தற்போது ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்ப்பதாயின், அவர்களுக்கு அமெரிக்க உதவி இதுவரை கிடைத்து வந்த அளவு போதாது. அமெரிக்கா மிக்கப் பெருவாரியான தளவாடங்களோடு தனது துருப்புகளையும் நேரடியாக சீனப்போரில் ஈடுபடுத்துவதன் மூலமே சியாங் சர்க்காரைக் காப்பது சாத்தியமாயிருக்கலாம். இவ்வாறு அமெரிக்கா சீனப்போரில் நேரில் கலந்துகொள்வதைக் கண்டு ரஷ்யா வாளாவிருக்காது. அத்தகைய ஒரு பயங்கர நிலைமைக்கு இடங்

—அடுத்த பக்கம் பார்க்க.

தர அமெரிக்கா விரும்பாதது இயற்கையே. இதோடு சீனா கம்யூனிஸ்ட் மயமானாலும், இப்போதைக்கு அது ரஷ்யாவுக்கு ஒரு சக்தி வாய்ந்த கருவியாகப் பயன்படாதென்பது அமெரிக்கர் நினைப்பாயிருக்கக்கூடும். நெடுங் காலமாக உள்நாட்டுச் சண்டையால் சிதைவுற்ற சீனப் பொருளாதாரத்தைச் சீர்செய்ய பல வருஷங்களாவது திண்ணம். இதற்குள் ஜப்பான், கொரியா முதலிய அண்டைப் பிரதேசங்களில் தான் பலமாக ஊன்றிக்கொண்டு விட முடியுமென்று அமெரிக்கா கருதலாம்.

எப்படியும், தற்போது சியாங் சர்க்கார் தங்களை மூழ்கடிக்கவிருக்கும் கம்யூனிஸ்ட் வெள்ளத்துக்கு அணை போடக்கூடிய நிலையிலில்லையென்பது தெளிவு. இந்த நெருக்கடியில் சீனாவில் ஒரு புதிய மந்திரிசபை உருவாகியிருக்கிறது. இதில் முக்கியப்பொறுப்பேற்றுக்கொண்டுள்ள டாக்டர் ஸன்போ கம்யூனிஸ்டுகளுடன் ஒரு கௌரவமான சமாதானம் ஏற்படப் பேச்சு நடத்தத் தயார் என்று பகிரங்கமாகச் சொல்லுகிறார். அமெரிக்கர் மேற்கொண்டு உதவக்கண்டிப்பாக மறுத்துவிட்ட நிலையில், கம்யூனிஸ்டுகளுடன் ஒரு சமரசத்துக்கு வருவதில் சீன சர்க்காரின் நாட்டம் திரும்புவது இயற்கையே. சமரசம் செய்து வைக்கும் பொறுப்பை ஏற்க சீன சர்க்கார் அமெரிக்காவையும், கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவையும் அழைக்கலாமென்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. ஆனால் சீனப் போர் இவ்வளவு முடிவான ஒருகட்டத்தை அடைந்த பின், வெளியார் தலையீட்டின்பேரில் ஒரு சமரசம் ஏற்படச் சிறிதும் இடம் இருப்பதாகக் காணவில்லை. கம்யூனிஸ்டுகளுக்கு தற்போது மகத்தான வெற்றி ஏற்பட்டுவரும் இந்நிலையில் அவர்கள் ஒரு கூட்டு மந்திரி சபையில் மைனாரிட்டியாக இருக்க இணங்குவரென்று சியாங் கோஷ்டியில் சிலர் இன்னும் மனப்பால் குடிப்பது ஆச்சரியமாகும். ஒரு சமரச ஏற்பாடு உருவாவது சாத்தியமெனவே வைத்துக்கொண்டபோதிலும் அதன் மூலம் ஏற்படும் புதிய சர்க்கார் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் மயமாகவே இருக்கும். அதற்குப் பின் மார்ஷல் சியாங்குக்கு சீன அரசியலில் எத்தகைய ஸ்தானமுமிராதென்பதும் திண்ணம்.

சீன நிலைமை குறிப்பாக அமெரிக்காவுக்குப் போதிக்கும் படிப்பினை பட்டவர்த்தமானது. அமெரிக்கா இதுவரை சீனாவுக்குப் பெருவாரியாக உதவி வந்தும் அவ்வளவும் வியர்த்தமாகிவிட்டதற்கான காரணங்கள் இரண்டு. அவ்வுதவி பெரிதும் போர்த்தளவாடங்கள் ரூபத்திலேயே அமைந்தது ஒன்று: மற்றொன்று, சீனாவில் ஒரு சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்தவே அந்த உதவி பயன்பட்டு வந்ததாகும். சீன மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தி, அங்கு ஜனநாயகம் ஊன்றக்கூடியவாறு அமெரிக்கா உதவி புரிந்திருப்பதேமுறை. அவ்வாறு செய்திருந்தால், சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் பலமும், செல்வாக்கும் ஒரு போதும் இவ்வளவு தூரம் பெருகியிருக்க முடியாது. ஆசியாவிலுள்ள மற்ற நாடுகள் விஷயத்திலாவது அமெரிக்கா இப்படிப்பினையை நினைவில்கொண்டு நடந்துகொள்ளுமா? இந்நாடுகளிலும் ஆங்காங்கு கம்யூனிஸ்ட் கட்சி தலையெடுத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு ஆக்கமளிப்பது முக்கியமாக இப்பிராந்தியத்திலுள்ள பொருளாதாரச் சீர்கேடே. இதைப் பரிகரிப்பதற்கான உருவான நடவடிக்கைகளைப்போல் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் குழி வெட்டக்கூடியது எதுவுமில்லை இத்துறையில் அமெரிக்கா. இந்தியாபோன்ற நாடுகளுக்கு விசேஷமாக உதவக்கூடும். எனினும் இங்கு புதிதாக வந்துள்ள அமெரிக்க ஸ்தானிகர் பேசியுள்ள வகை சிறிதும் நம்பிக்கையளிக்கக்கூடியதன்று. இந்தியாவுக்குப் பொருளாதாரத் துறையில் உதவுவதை அமெரிக்கா ஒரு அவசர காரியமாகக் கருதவில்லையென்பதே அதன் கருத்து. ஐரோப்பிய நாடுகளைவிட இப்பிராந்தியத்தில் வறுமையும், பிணியும் பன்மடங்கு அதிகமென்று அறிந்தும், அவற்றைப் பரிகரிக்க உதவுவது அவசரமல்லவென்று அமெரிக்கர் பேசுவது ஆச்சரியமாகும். இவ்வளவு அனுபவத்துக்குப் பிறகு அவர்களுடைய கோளாறான திருஷ்டி சிறிதும் மாறவில்லையென்பதையே அது குறிக்கிறது விரைவில் அவர்கள் திருஷ்டி திருந்தவில்லையாயின், அதன் விபரீத விளைவை அமெரிக்காமட்டுமின்றி உலக முழுதுமே அனுபவித்தாகவேண்டும்.



தமிழிசை விழா திறப்பு வைபவத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ ராமஸ்வாமி ரெட்டியார் ஒரு தம்புராவை (கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் பரிசு) ஸ்ரீமதி வேதவல்லி அம்மாளுக்கு அளித்தார்.

அட்டைப்படம்

தாய் கூறும் உவமை

சிறந்த வீரர் பரம்பரையான மறக்குடியில் வாழ்க்கைப்பட்ட பெண்ணொருத்திக்குத்திரனாக ஒருபுதல்வன் பிறக்கிறான். அவனை ஈன்ற தாய் இனிய செய்யுள்களைப் புனையும் ஆற்றலுள்ளவள். தன்னுடைய மகன் போர்க்களம் சென்று பேரும், புகழும் அடைந்து விளங்குவதில் அவளுக்கு எல்லையில்லாத பெருமிதம்.

ஒருநாள், அவ்வீரனிடம் மனதைப் பறிகொடுத்த நங்கையொருத்தி அவனில்லாத சமயத்தில், அவனைக்காணவேண்டி அவன் வீடு தேடிச் செல்கிறாள். சிறு வீடு. அங்கு வீரனின் தாயிருக்கக் காண்கிறாள். "அவர் இருக்கிறாரா?" என்று ஒரு சிறிய தூணை லாகவமாகப் பற்றி நின்று விசாரித்த அவ்வழகிக்கு, வீரனின் தாய் ஒரு உவமையோடு பதில் சொல்லுகிறாள்.

எனக்கு அவன் எங்கிருக்கிறான் என்பது எப்படித் தெரியும்? ஒரு புலி இருக்கிறது. அது குகையில் உறைந்து கிடந்து பிறகு அதை விட்டு தன் வேலையைப் பார்க்கப்போய் விடுகிறது. இந்நிலையில் புலிக்கும், குகைக்கும் என்ன உறவிருக்குமோ அது போலத்தான் எனக்கும் என் மகனுக்குமுள்ள உறவு. தாய் தன் வயிற்றுக்கும் புலி கிடந்த குகைக்கும் உவமைப்படுத்திப் பேசுகிறாள். தன் மகன் வீரன் என்ற பெருமிதத்தையும் இதில் காண்கிறோம். தன் மகனை வீட்டில் பார்க்க முடியாது; வேண்டுமானால் போர்க்களம் சென்று பார்; என்று சொல்லுவதில் தன் மகனுடைய வீரத்தை எவ்வளவு உயர்வாகச் சித்திரிக்கிறாள் தாய்! இந்த சம்பாஷணை 'புற நானூ'றில் பாட்டு வடிவாகயிருப்பதைப் பார்க்கலாம்:—

சிற்றி னற்றூண்பற்றி நின்மகன்
யாண்டுளனோவென வினவுதி யென்மகன்
யாண்டுளனாயினு மறியேனும்
புலிசேர்ந்து போகிய கல்லளைபோல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே.

தொண்டர்கள் அணிவகுப்பு



சென்ற மாதம் 20-ந்தேதி ஜெய்பூரில் தொண்டர்கள் அணிவகுப்பு நடைபெற்றது. பண்டித நேரு பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்குப் பின்புறத்தில் சர்தார் படேல் வீற்றிருக்கிறார்.



நேரு, படேல், ஜெய்பூர் மஹாராணி மூவரும் சென்ற மாதம் 16-ந்தேதி ஜெய்பூரில் சம்பாஷித்தனர்.

ஜெய்பூர் காங்கிரஸ் படங்கள்



காங்கிரஸுக்குப் போகும்போது காந்தி நகரில் மக்கள் அவரைத் தரிசிக்க வளைத்துக்கொண்டுவிட்டனர். கூட்டத்தினரை நேரு சமாதானப்படுத்திக்கொண்டு நிற்கிறார்.

ஜெய்பூரில் நடந்த 55-வது காங்கிரஸுக்குப் பிரதம மந்திரி நேருவும், ஸர்தார் படேலும் செல்லுகையில் எடுத்த படம்.

வித்வத் சபை விருந்து

நீலம்

நாட்டில் உணவு நெருக்கடி; உடை நெருக்கடி! உறைவிட நெருக்கடி! அரசியல், பொருளாதாரம், சமூகம் அனைத்திலும் ஒரே நெருக்கடி! இந்த 'நெருக்கடி' ஜாபிதாவில் ஸங்கீதத்தையும் சேர்த்துக் கொள்ளும் நிலைமை இப்போது! ஸங்கீத ரஸிகர்கள் பக்க வாத்தியக்காரர்களுக்கு வசதியாக உயர்ந்த சுருதியில் ஒரு பல்லவியைப் பாடுகிறார்கள்! இந்த வருஷம் வித்வத் ஸபை ஸங்கீத மகாநாட்டின் தலைவர் பிடில் ஸ்ரீமான் பிள்ளை, பாடகர்கள் சுருதியை அதிகமாக வைத்துக்கொண்டு பாடவேண்டுமென்று சொன்னாரல்லவா? பாடகர்கள் இதைப் பின்பற்றுவார்களோ என்னவோ! ரஸிகர்கள் பின்பற்றி விட்டார்கள்! ஸங்கீத நெருக்கடியைப்பற்றி ரஸிக சிகாமணிகள் உயர்ந்த சுருதியுடன் பாடும் பல்லவி "இத்தனை விழாக்களை ஏககாலத்தில் வைத்தால் எங்கு போய் கேட்போம் ஐயா!" என்பதுதான். பிரதி வருஷமும் டிஸம்பர் கடைசி வாரத்தில் ரஸிகர்கள் சமாளிக்க வேண்டிய "ஸங்கீத நெருக்கடி" இது! ஆம்.

சென்னையில் வழக்கமாக பல்வேறு சபைகளின் ஆதரவில் ஒரே காலத்தில்தான் ஸங்கீத விழாக்களெல்லாம் நடக்கின்றன. இது எல்லா வித்வான்களது நிகழ்ச்சியையும் பாக்கி விடாமல் கேட்க விரும்புவோருக்கு நெருக்கடியாகத்தான் இருக்கிறது. சென்ற வருஷம் வரையில் இதைத் தீர்க்க முடியாமல் போனதற்குச் சர்க்கார்தான் காரணம்! அதாவது கிறிஸ்மஸ் என்பதற்காக அவர்கள் சேர்ந்தாப்போல் 1-வாரத்துக்கு ஆபீஸ்களை மூடி விடுவார்கள். கல்வி ஸ்தாபனங்களுக்கு விடுமுறை. காரியாலயங்கள் பலவற்றிற்கும் லீவ். எனவே சபைக்காரர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு அவரவர்கள் தங்கள் தங்கள் சபைகளில் கச்சேரி ஸிரீஸ்களை ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இந்த வருஷத்தில் விருந்து அப்படியில்லை நிலைமை. இதைச் சற்று சபைக்காரர்கள் முன்னதாகக் கவனித்திருந்தால் ரஸிகர்கள் நெருக்கடியை ஓரளவேனும் தவிர்த்திருக்கலாம். அதாவது ஏதாவது ஓரிரு சபைகளின் நிகழ்ச்சிகளை விடுமுறை ஒன்றாகச் சேர்ந்து வரும் வேறு மாதங்களில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இதற்காக ரஸிகர்களும் வாளாவிருந்துவிடவில்லை. தாங்களே பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த கச்சேரிகளுக்கு, எந்தெந்த சபைகளுக்குப் போவதென்பதை அவர்கள் முற்கூட்டித் திட்டம் போட்டுக்கொண்டு விடுகின்றனர். எனினும் மேற்சொன்ன மாதிரியில் ஸங்கீத விழாக்களை வெவ்வேறு சமயங்களில் பிரித்துவைத்து நடத்தினால் சபைகளுக்கும், ரஸிகர்களுக்கும் பரஸ்பரம் அனுகூலமுண்டு. வரும் வருஷத்திலிருந்தேனும் இவ்விஷயம் சம்பந்தப்பட்டவர்களது கவனத்தைக் கவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை ஸங்கீத வித்வத் ஸபை மகாநாடு சென்ற 24-ந்தேதியன்று கவர்னர் பவநகர் மகாராஜாவால் திறந்து வைக்கப்பட்டது. ஸர்வதேச ஸங்கீதக்கழகத்தின் இந்தியக் கிளை ஸ்தாபனமும் இவ்வருஷ மகாநாட்டில் கலந்து கொண்டிருப்பது ஒரு தனி விசேஷம். மகாநாட்டின் தலைவர் ஸங்கீதக் கலாபிவிருத்திக்காக நல்ல யோசனைகளை வெளியிட்டார். ஸம்பிரதாயமான ஸங்கீதத்தைத் தூய்மையுடன் பராமரிப்பதற்கான மார்க்கங்களையும் அவர் சுட்டிக் காட்டினார். வருங்காலத்தில் பிரகாசிக்க வேண்டியவர்கள் பின்பற்றினால் பயன் பெறுவர்.

மகாநாட்டையடுத்து நடைபெற்ற முதல் கச்சேரி வழக்கம் போல ஒரு விதூஷியினுடையதாகும். ஸ்ரீமதி சந்திரா ராமமூர்த்தி அன்று மாலை பாடினார். ஸ்ரீமதி கோமளவல்லி பிடில்: ஸ்ரீமதி ரங்கநாயகி மிருதங்கம். ஸ்ரீமதி சந்திரா தொடர்ந்து ஸங்கீதாப்பியாசம் செய்தவர். ரஸிகரஞ்சனி சபையார் முந்திய வருஷங்களொன்றில் நடத்திய நவராத்திரி விழாக் கச்சேரியில் வெகு அழகாகப் பாடியவர். எனவே மேடைக் கச்சேரி இவருக்குப் புதிதல்ல. ஸ்ரீமதி கோமளவல்லி ஸ்ரீனிவாஸன் இவருக்கு அனுசரணையாகவும், அடக்கமாகவும் அழகு துலங்க வாசித்தார்.

ஸ்ரீ சாம்பசிவன்

25-ந்தேதியன்று மாலை 3-30 மணிக்கு ஸ்ரீமான் ஜி. ஸ்ரீனிவாஸன் பிடிலோடு கச்சேரி செய்த மன்னார்குடி ஸ்ரீமான் சாம்பசிவன் மகாராஜபுரம் ஸ்ரீ விச்வநாதய்யருடைய சிஷ்யர்.



ஸங்கீத வித்வத் சபை மகாநாட்டை சென்னைக் கவர்னர் திறந்து வைத்துப் பேசுகிறார். தலைவரையும் இதர வித்வான்களையும் சேர்த்து எடுத்த படம்.

வித்வத், ரஸிக வட்டாரங்களில் ஸகஜமாகவும், ஸரளமாகவும் பழகும் பண்பு உடையவர். ஞானமும், நிறைந்த கேள்வியும் உண்டு. அன்றைய கச்சேரியில் இவர் பாடிய உருப்படிகள், ராகங்கள் முதலியவற்றில் வாசஸ்பதியும் கனராகமாக எடுத்துக்கொண்ட ஷண்முகப்பிரியாவை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். பாடும்போது 'டெம்பொ' குறையாமல் பார்த்துக்கொண்டால் நலம்.

ஸ்ரீ செம்மங்குடி

மாலை 5-மணிக்கு ஸங்கீத கலாநிதி ராஜ்ய ஸேவா நிரத ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர் கச்சேரி. ஸ்ரீ ராஜமாணிக்கம்பிள்ளை பிடில்; ஸ்ரீ முருக பூபதி மிருதங்கம். காபி நாராயணியிலுள்ள உருப்படியைக் கவர்ச்சிகரமாக முதலில் பாடி கச்சேரியைத்துவக்கினார். இந்நிகழ்ச்சியில் இவர் பாடிய உருப்படிகள் பல புதியவை. எனவே பிரத்யேகமாக இவரிடம் பரிமளிக்கும் முகாரி, தோடி, வராளி முதலியவற்றிலேயே ரஸிகர்கள் அதிக சுவையைக் கண்டனர். முகாரி கீர்த்தனை பரம பங்கிடாக விளங்கிற்று. தேவ காந்தாரி ராக ஆலாபனையில் பாவம் பூரித்து நின்றது. சங்கராபரண ராகம், தானம். ஆலாபனையில், பாடகரின் வழக்கமான உணர்ச்சிப்பெருக்கு வெளிப்பட்டது. ஸ்ரீமான் ராஜமாணிக்கம்பிள்ளையும், ஸ்ரீ முருக பூபதியும் அடக்கமாகவும், அழகாகவும், அனுசரணையோடும் வாசித்தனர்.

ஸ்ரீ பண்டித ரதன்ஜங்கர்

அன்று இரவு 9-15 மணிக்கு லட்சுமணபுரி மாரிஸ் காலேஜ் பிரின்ஸ்பல் ஸ்ரீ பண்டிதரதன் ஜங்கர் ஹிந்துஸ்தானி கச்சேரி செய்தார். இந்தூர் ஸ்ரீ ஸகாராம்ஜி மிருதங்கம்.



ஸ்ரீ செம்மங்குடி.

ஸ்ரீ ரதன் ஜங்கரின் கச்சேரியைக்கேட்ட ஒவ்வொருவருக்கும் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்துக்கும் கர்நாடக ஸங்கீதத்துக்கும் அநேக விஷயங்களில் உள்ள ஒருமைப்பாடு புலனாயிற்று. அதாவது ஹிந்துஸ்தானி சங்கீதமும் கர்நாடக ஸங்கீதமும் ஒரே "ஸ்விட்சி"ல் எரியும் இரண்டு மின்சார தீபங்கள் போன்றவை. இதை அவர் பாடிய வகை நன்கு நிரூபணம் செய்தது. சென்னைக் கவர்னரும் இக் கருத்தையேதான் மகாநாட்டுத் திறப்பு விழாப் பிரசங்கத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரின்ஸ்பல் ஸ்ரீரதன் ஜங்கர் நிறைந்த பாண்டியத்தியம் உள்ளவரென்பதையும் விவேகம் மிக்கவர் என்பதையும் அவரது பாட்டு தெளிவாக்கிற்று. தென்னிந்தியாவில் கர்நாடக ஸங்கீதத்தைக் கேட்டுக் கேட்டு பண்பட்ட ரஸிக சமாஜத்தின் முன் பாடுகிறோம் என்ற உணர்வோடு பாடினார். இந்தப் பாடகருக்கும் இதர வட இந்திய வித்வான்களைப்போலவே விசேஷமான சாரீரப் பயிற்சி

இருந்திருக்கிறது. ஸ்தாயி வாரியாக அனுசமாகச் சாரீரத்தை இயக்குகிறார். உதவு படிகளும் அழுத்தமும் சுகபாவமும் இடம் பெற்று விளங்கும்படி பண்படுத்தியிருக்கிறார். 'பூபாளி' என்ற ராகத்தை அவர் பாட ஆரம்பித்த போது ஏதோ கர்நாடக வித்வான் மோகனத்தை அழகாக ஆண்டு ஆலாபித்ததைப்போலத்தான் இருந்தது. 'பஹாரா' என்ற ராகத்தையும் அவர் சுவைத்து விரிவுபடப் பாடினார். இறுதியில் காபி ராகத்தில் பஜன். இது கச்சேரியில் மிகச் சிறந்து விளங்கிய ராகம்.

ஸ்ரீ நாராயண ஸ்வாமி

26-ந் தேதியன்று மாலை 3-30 மணிக்கு பாலக்காடு ஸ்ரீ கே. வி. நாராயணஸ்வாமி பாடினார். ஸ்ரீ லால்குடி ஜெயராமன் பிடில்; ஸ்ரீ எம். எஸ். ஸபேசன்-மிருதங்கம்.

ஸ்ரீ நாராயண ஸ்வாமி, தன் நடைக்கத்தோடு சீரிய முறையில் குருகுல வாஸத்தின் மூலம் அப்பியஸித்த இளம் பாடகர். அவர் பின்பற்றி வரும் ஸங்கீதச் சுவடு பவித்திரமானது. இத்தோடு சாதுர்யமாக மேடைக்கச்சேரியின் வெற்றிக்கான அம்சங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டவர். எனவே இவரது கச்சேரியின் தரம் முதன்மையுடனிருந்ததில் வியப்பில்லை. இக்கச்சேரி நிகழ்ச்சியில் சிறந்து விளங்கிய ஆலாபனைகளில் கல்யாணியும், கனராகமாக எடுத்துக்கொண்ட தோடியுமாகும். அவை கவர்ச்சிகரமாகவும் ஸம்பிரதாய வழிகள் செறிந்தவையாகவும் சோபித்தன.

கச்சேரி அவகாசத்துக்கு அனுசரணையாக இவர்-தமது ஆலாபனை, ஸ்வரப்பிரஸ்தாரம் இவற்றை கட்டுப்படுத்திக் கொண்டதைக் குறிப்பிடவேண்டும். எல்லா அம்சங்களிலும் தெளிவும் மிதமும் இருக்கும்படி அளவோடு பாடினார். தோடியில் பாடிய பல்லவி மிடுக்காக விருந்தது. கமாஸில் "மாருபாரி" சுகம் தோய்ந்து விளங்கிற்று. ஸ்ரீ லால்குடி ஜெயராமன் வெகு அழகாக வாசித்தார். நல்ல நாதத்தோடு மென்மை தொனிக்க விறுவிறுப்பாக வாசித்தார். ஸ்ரீமான் ஸபேசன் வாசிப்பில் நயமும், நாதமும் நன்கு படிந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.



ஸ்ரீ நாராயணஸ்வாமி.

ஸ்ரீ மகாலிங்கம்

முதல்தரமான பக்கவாத்தியங்களோடு ஆரம்பமுதல் இறுதி வரையில் பூர்ணமாக வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எழுப்பிய கச்சேரி ஸ்ரீ மகாலிங்கத்தின் புல்லாங்குழல் கச்சேரி. புல்லாங்குழலில் தெய்வானுக்கிரகத்தால் இவருக்குக் கிட்டியிருக்கும் யோக்யதை பிரசித்தம். இந்தக்கச்சேரி சம்பந்தப்பட்டவரையில், ஆரம்பத்தில் அவர் கையாண்ட முறைகளே தொடர்ந்திருக்குமானால் கச்சேரி ஒரே துயரப்படலமாக மாறியிருக்கும். கச்சேரிக்கென்று மேடைக்கு வந்தால் அங்கு ரஸத்துக்குத்தான் முதலிடம். விரஸங்களை விலக்கவேண்டும். ஸ்ரீ மகாலிங்கம் கச்சேரியின் துவக்கத்திலிருந்த விரஸங்கள் பிற்பகுதியில் தான் ஓரளவு விலகின. துன்பமும் இன்பமும் கலந்திருந்த நிகழ்ச்சி இது. அவர் அன்று வாசித்தவற்றில் ரஸிகர் உள்ளத்தைத் திருப்திப்படுத்தியது "எவரனி" கீர்த்தனை; பல்லவிக்காக எடுத்துக்கொண்ட பைரவி ராகத்தை அப்பட்டமாக வாசித்திருக்கலாம். ஆனால் பல்லவியைத் தொடர்ந்து வாசித்த ராகங்களில் சாமா முதல்தரம். அது அதிஅழகாக விழுந்தது. ஸஹானா உருப்படியை தூரத்து தூரத்தென்று தூரத்தாமல் சுத்தமாயும், சுகமாயும் வாசித்திருந்தால் எவ்வளவோ விசேஷமாக இருந்திருக்கும்.

ஸ்ரீ பாப்பா வெகு அழகாகவும் பாவம் பொங்கவும் வாசித்து திருப்தி தந்தார். பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் பிரத்யேக உற்சாகத்தோடு வாசிக்கும் நிலைமையை உண்டு பண்ணியிருக்கலாம். ஆனால் இதற்கு அவர் பொறுப்பாளியல்லவென்பது அனைவருக்கும் தெரியும்.

ஸ்ரீ மகாலிங்கம்

உஸ்தாஸ் அலி அக்பர்கான்

இரவு 9-15 மணிக்கு ஜோட்பூரைச்சேர்ந்த உஸ்தாத் அலி அக்பர்கான் சாகேப், ஸரோட் என்ற வாத்தியத்தில் ஹிந்துஸ்தானி கச்சேரி செய்தார். பக்க வாத்தியம் தபலா. இவர் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் பிரபல நிபுணராகவுள்ள டாக்டர் அல்லாவுதீன் கான் சாகேப்பின் புதல்வர். இவர் தேர்ச்சி பெற்றிருக்கும் இவ்வாத்தியம் ரூபாப்-மாதிரியிலுள்ளதாகும். இதற்கு 4 தந்திகள் உண்டு; அனுசரணையாக 18 தந்திகள். வித்வத் ஸபையார் வழங்கிய விவரணக் குறிப்பிலிருந்து இவ்வாத்தியத்தில் தேர்ச்சி பெறுவது ரொம்ப சிரமமென்று தெரிகிறது. ஆனால் அலிகார்கான் ஸாகேப் அன்று வாசித்த தோரணையிலிருந்து, அவர் அதில் எவ்வளவு திறமையோடு தேர்ச்சியடைந்திருக்கிறார் என்பது புலனாயிற்று.



12

தமிழகத்தில் கிறிஸ்துபெருமான்

★

கள்ளமுறும் கடையேனும்
கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளம் முகந்(து) அருள்
பொழியும்
விமலலோ சனநிதியை,
உள்ளம் உவப் புறுதேனை,
உயிர்க்குயிரை, உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியை

என்று காந்தாரப் பண்ணில் பாடிக்கொண்டிருந்தேன். 'என்னம்மா இது, தேவ பூஜையில் கரடி விட்டமாதிரி, தேவாரம் பாடுகிருயே கிறிஸ்துமஸ் வாரத்திலே!' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் ஸரோஜா. கமலாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

நானே அதே பாட்டை மறுபடியும் பாடினேன்.

உள்ளம்உவப் புறுதேனை,
உயிர்க்குயிரை, உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியை

என்று மீண்டும் பாடியதும். 'தேனுகவும் தெள்ளமுதாகவும் தித்திக்கிறது தேவாரம். இப்படிப் பாடிப் பார்த்தால்தானே அருமை தெரிகிறது, இனிமை தெரிகிறது?' என்ருள் ஸரோஜா. கமலா மறுபடியும் சிரித்தாள்.

'என்ன அசட்டுச் சிரிப்பு. அசந்தர்ப்பமான சிரிப்பு! பக்திச்சுவை சொட்டச் சொட்டத் தேவாரம் பாடியிருக்கிருர்கள்: இதில் நகைச்சுவை ஒன்றும் இல்லையே!' என்ருள் ஸரோஜா.

கமலா சிரிப்பை அடக்கிக் கொண்டு என்னைப்பார்த்து 'பாடி முடித்துவிடு அந்தத் தேவாரப் பாட்டை, ஏன் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிருய்?' என்ருள். நானும் பாடி முடித்தேன்:

தெள்ளமுதைத் தீங்கனியைச்
சிலுவைமிசைக் கண்டேனே!

ஸரோஜா திடுக்கிட்டாள். 'சிவ பூஜை வேளையில் கரடி வந்து விட்டதே, சிலுவை வந்துவிட்டதே!' என்ருள். பிறகு கமலா சிரித்ததையும் நினைத்துப் பார்த்தது போல், 'தேவாரமில்லையா இது?' என்று திகைத்தாள்.

'தேவாரம் தான்!' என்றேன் நான்.

தேவாரத்திற்கும் சிலுவைக்கும் என்ன தொடர்பு? அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் உள்ள தொடர்பு தானே!' என்று பரிதாபமாய் என்னைப் பார்த்தாள் ஸரோஜா.

'உண்மையாகவே தேவாரம் தான் இது; ஆனுல் மூவர் பாடிய அந்தத் தேவாரம் இல்லை!' என்றேன்.

ஸரோஜாவின் திகைப்பு அதிகரித்தது. 'வேறு தேவாரமும் உண்டா, அந்த மூன்று நாயன்மார்களும் அருளியது தவிர?' என்று ஆவலாய்க் கேட்டாள்.

'ஒரு கிறிஸ்தவ நாயனுர் அருளிய தேவாரம் நான் இப்போது பண்ணுடன் ஓதியது!'

'கேலியா பண்ணுகிருய்? நான் நிஜமாகவே சந்தேகம் தெளிய விரும்புகிறேன்.'

'உன்னை ஏன் பரிகசிக்கவேணும் இப்போது? அந்தக் கிறிஸ்தவ நாயனுரின் பெயர் கிருஷ்ண பிள்ளை.',

'பெயர் கிருஷ்ணபிள்ளை, மதம் கிறிஸ்துமதம், பாடியது தேவாரம்—என்ன முரண்பாடு!'

பிறகு நான் 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற தமிழ்க்காவியம் பாடியிருக்கும் கிருஷ்ணபிள்ளையின் வரலாற்றைச் சொன்னேன். 'அவர் வேளாளர் வகுப்பில் தோன்றி வைஷ்ணவராக இருந்து கிறிஸ்தவராகி, ஆங்கில பக்தசிரேஷ்டனுன ஜான்பனியன் ஆங்கில பாஷையில் எழுதியிருக்கும் "மோட்சயாத்திரை" என்ற நூலை (P.lgrims Progress) "இரட்சணிய யாத்திரிகம்" என்ற பெயரால் தமிழில் பாடியிருக்கிருர். அதில் தேவாரப் பண்ணில் தேவாரப்போக்கைத் தழுவியது நான் பாடிய பாட்டு' என்றேன்.

'ஜான்பனியன் "தேனை, அமுதை, தீங்கனியை" என்றெல்லாம் எங்கே பாடியிருக்கிருர்? பனியன் இயற்றிய பாவனுசரிதம் வசன காவியமல்லவா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'அதன் மொழிபெயர்ப்பு என்று விமலா சொல்லவில்லையே. அந்த வசன காவியத்தை தழுவல்-இந்

தத் தமிழ்க் காவியம்' என்ருள் கமலா.

'அப்படியா செய்தி? தேவாரம் போல் கனிந்த வாக்கு' என்று வியந்தாள் ஸரோஜா.

'தேவாரத்தின் எதிரொலிகள் மட்டுமல்ல, வைணவர்களின் நாலாயிரப் பிரபந்த எதிரொலிகளையும் இந் நூலில் கேட்கலாம். தமிழ் இலக்கியத்தின் கிரீடமான கம்ப ராமாயணத்தின் எதிரொலியையும் கேட்கலாம்' என்றேன் நான்.

அதற்கு ஸரோஜா, 'இவ்வளவு கவித்வசக்தியையும் கிறிஸ்துவுக்கா அர்ப்பணம் செய்துவிட்டார்?—என்று சிவபக்தர்களும், விஷ்ணுபக்தர்களும் அதிசயிக்கும்படி, பொருமை கொள்ளும்படி அமைந்திருக்கிறதே நீ பாடிய பாட்டு' என்ருள்.

'உண்மைதான். இப்படிப் பல பாடல்கள் இந்த நூலகத்தே காணப்படுகின்றன. 'கிருஷ்ண பிள்ளை கிருஷ்ணனைப்பாடாமல் கிறிஸ்துவைப் பாடிவிட்டாரே!'' என்று கிருஷ்ண பக்தர்களும் பொருமைப்படக்கூடிய சில பாடல்களும் இக்காவியத்தில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் இந்தக் கிருஷ்ண பிள்ளையும்—ஆம், இந்த இரட்சணிய யாத்திரிக ஆசிரியரும்,

வள்ளல் குருராயன்
மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி அவதரித்த
எம்மான் சருவேசன்

என்று தாம் போற்றும் கிறிஸ்து பெருமானைக் கவிச் சக்கரவர்த்தியான கம்பர் பாடாமல் போய் விட்டாரே!— என்று கவலைப் பட்டிருக்கிருர்' என்றேன்.

'அப்படியும் சொல்லியிருக்கிருரா, என்ன?' என்று கேட்டாள் கமலா.

'அவர் அந்தக் கவலையை, அந்த மன உளச்சலைக் கடுமையான பாஷையில் வெளியிட்டிருக்கிருர். ஒருவனுக்கு ஒரு தங்கக் கிண்ணம் கிடைத்துவிட்டது. அதிலே அவன் பால்முதை வைப்பதற்கு மாருக விஷத்தை வைத்துவிட்டானும். கவிச் சக்கரவர்த்தி செய்த காரியம் இது!— என்று அங்கலாய்க்கிருர்' என்றேன்.

'அந்த உவமைக்கதை எனக்கு விளங்கவில்லையே' என்ருள் ஸரோஜா.

'மதுர கவிதை என்ற பொற் கிண்ணம் கம்பருக்குக் கிடைத்திருந்தும் அதிலே கிறிஸ்து சரித்திரத்தைப் பெய்து வைக்கும் பாக்கியம் பெற்ருரில்லையாம் கம்பர். ''விஷத்தையா கக்கி வைப்பது இந்த அம்பொற் கிண்ணத்திலே?'' என்று அலறுகிறது இந்தக் கிறிஸ்து பக்தரின் ஹிருதயம்' என்றேன்.

'என்ன மதாவேசம்!' என்ருள் கமலா.

'கம்பரை எவ்வளவு மோசமாக மதித்திருக்கிருர் இந்தக் கவிஞர்!' என்ருள் ஸரோஜா.

'கம்பரிடம் கிருஷ்ண பிள்ளைக்கு விசேஷ மதிப்பு உண்டு. ''இரட்சணிய யாத்திரிக'த்தின் முகவுரையிலே இந்த ஆசிரியர் தமது காவியம் பெரும்பாலும் கம்ப ராமாயணத்தின் நடையையும் போக்கையும் அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்டது என்கிருர். கம்ப ராமாயணத்தை ''ஸ்ரீமத் கம்ப ராமாயணம்'' என்று குறிப்பிடுகிருர். ''கம்ப ராமாயணம் ஒன்றே கற்ருேர் எவரும் வியந்து புகழ்ந்து மெச்சத்தக்கது'' என்கிருர்' என்றேன்.

'அப்படி ரஸித்து ரஸித்துப் படித்து அனுபவித்திருக்கிருரா கமடன் கவிதையை?' என்ருள் ஸரோஜா.

'எனினும் கம்பராமாயணத்தைப் பழிக்கவும் செய்கிருர். எல்லாம் மதாவேசம்தான்' என்ருள் கமலா.

'மதாவேசம் ஒரு மதத்தினருக்கும் ஏகபோக உரிமையன்று. நம்மவர்களிலும் மதாவேசக்காரர் உண்டு' என்றேன்.

'நாம் இந்நாளில் மதாவேசத்தை விட்டு விட்டு ''இரட்சணிய யாத்திரிக''த்தை அந்த இனிமையான தமிழுக்காகவாவது கற்கலாமே. ஏன் தானே இந்த நூல் தமிழர்களுக்கிடையே பிரசித்தமாக வழங்கவில்லை? கிறிஸ்து பகவானை

தெள்ளமுதைத் தீங்கனியைச்
சிலுவை மிசைக் கண்டேனே!

என்று இவர் பாடித் தமிழ்த் தெய்வமாகக்காட்டியிருக்கிருரே!' என்ருள் ஸரோஜா.

'கிறிஸ்தவ நூலாக இருப்பதோடு, இந்து மதக் கொள்கைகளை ஆவேசமாய்க் கண்டிக்கவும் செய்கிறது இந்த நூல். இதனல் இது இந்துக்களான தமிழறிஞர்களிடையே பரவவில்லை' என்றேன்.

'அப்படியானல் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குள்ளேயாவது இந்த நூல் பரவியிருக்கிறதா?' என்று கேட்டாள் கமலா.

'தாய்மொழிப்பற்று இந்நாளிலேதான் கிறிஸ்தவர்களுக்கிடையே அதிகரித்து வருகிறது. பொதுவாக எல்லோருக்கும் மதாவேசம் குறைந்து வருகிறது. இனிமேல் இந்த நூல் தனக்கு உரிய இலக்கியப் பதவி பெறும் என்பது நிச்சயம்' என்றேன்.

'தமிழுக்காவது இந்நூலை நாமெல்லாம் படிக்கலாமே' என்ருள் ஸரோஜா மறுபடியும்.

'தமிழுக்காக மட்டுமா? தியாக மூர்த்தியான கிறிஸ்து பெருமானுக்கு ஒரு தமிழ்மாலை சூட்டும் பாக்கியம் தமிழுக்கும் தமிழ நாட்டுக்கும் கிடைத்திருக்கிறதல்லவா? கிறிஸ்துமஸ் என்ற கிறிஸ்து ஜயந்தி கொண்டாடும் தமிழர்கள் எல்லாரும் கிருஸ்துபெருமானின் மகத்தான தியாகத்தை நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதோடு, அந்தத் தியாகமூர்த்தியைத் தமிழிலே தமிழர்களுக்குக் காட்டும் இந்தக் காவியத்தையும் மறந்து விடமாட்டோம் என்று சங்கற்பம் செய்து கொள்வது நலம் என்றேன்.

கதலீபுர நாடகம்



எஸ். ஜே.

அத்தியாயம் 15

பூமியிலிருந்து இறக்கைக் கட்டிக்கொண்டு ஒரு யுவனும், ஒரு யுவதியும் சந்திர மண்டலத்தை நோக்கிப் பறந்துபோகிறார்கள். சந்திர மண்டலம் வரவர நெருங்குகிறது. கடைசியில் சந்திர மண்டலத்துக்கே வந்து சேர்ந்துவிடுகிறார்கள்!

"உன்னுடைய முகத்தை நான் சந்திரனோடு ஒப்பிடமுடியாது!" என்கிறான் சேகரன்.

"ஏனாம்? சந்திரனைவிட நான் அழகில் குறைந்துபோய் விட்டேனா?" என்கிறாள் விசாலாட்சி.

"சே! சே! நான் சொன்னதைத் தவறாக எடுத்துக்கொண்டுவிட்டாய். இந்தச் சனியன்பிடித்த சந்திரன் பூமியிலிருந்து பார்ப்பதற்கு என்னமோ பிரமாதமாக இருந்ததே என்று பார்த்தேன். இங்கே வந்துபார்த்தால் சகிக்கமுடியவில்லையே!.. தவிர மூட்டைப்பூச்சி வேறு கடிக்கிறது இந்தச் சந்திர லோகத்தில்!" என்று சேகரன் விசாலாட்சியிடம் சொல்லிக் கொண்டிருந்தான். (உண்மையில் மூட்டைப்பூச்சிகள் ரெயில்வே நிர்வாகத்தைச் சேர்ந்தவைதான்!)

விசாலாட்சி கலீரென்று சிரிக்கிறாள், அந்தப் பக்கமாய்ச்சென்றுகொண்டிருந்த ஒரு கந்தர்வ ஸ்திரீ இந்த முல்லை நகையைக் கண்டு பொறாமை கொண்டு முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு போகிறாள்.

"இதோபார் விசாலம்! நான் உன்னிடம் ரொம்ப நாளாய் ஒன்று சொல்லவேண்டும் என்று நினைத்தேன்."

அவனுடைய கெஞ்சும் முகத்தைக்கண்டு விசாலம் புன்னகை செய்கிறாள்.

சேகரன் தயங்கிக்கொண்டே அவளை நெருங்குகிறான். விசாலத்தின் கைகள அவனை நெருங்குகின்றன.

இதோ! அந்தக் கோமளமான கரங்கள் அவனை ஸ்பர்சிக்கின்றன! இதென்ன கிரஹசாரம்! விசாலத்தின் கைகள் இரும்புப் பிடியாயிருக்கின்றனவே! புஷ்பம்போல் இருக்கவேண்டிய கை இரும்பு உலக்கைபோல இருக்கிறதே!

"எழுந்திரு! டேய், எழுந்திரு!" என்று அதட்டும் குரல் பக்கத்தில் கேட்டது. சேகரன் நன்றாய்க் கண்விழித்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தான்.

எதிர்பார்த்த ஒரு ஆசாமியைக் காணோம்! எதிர்பாராத ஒரு ஆசாமி நின்றுகொண்டிருந்தான்!

நடராஜனைக் காணோம்! ஆனால் ஒரு கான்ஸ்டேபிள் எதிரில் நின்றான்.

"டேய்! உன்பெட்டியை எடு!" என்று கடுமையான குரலில் சொன்னான் கான்ஸ்டேபிள். சேகரன் பக்கத்திலிருந்த கூஜாவை எடுத்துத் தண்ணீரை முகத்தில் தெளித்துக்கொண்டான். தூக்

கக்கலக்கமெல்லாம் போய்விட்டது. ஆனால் போலீஸ்காரன் இன்னும் போகவில்லை.

"என்னப்பா வேணும்!......" என்று விசாரித்து விட்டுப் பரபரப்புடன், "என் பக்கத்தில் இருந்த ஆள் எங்கே?" என்று கேட்டான். பெரிய ஏமாற்றத்திற்குள்ளானதால் அவன் முகம் வெட்கத்தினாலும் அவமானத்தினாலும் சிவந்தது.

"டேய்! உன் பெட்டியை எடு!" என்று தன் பல்லவியைப் பாடினான் கான்ஸ்டேபிள்.

"அது கிடக்கட்டும்! ஓடு! அந்த ஆப்த ஆளைத் தேடு. இந்தா! அடையாளங்களை எழுதிக் கொள்!......ஒரு பெரிய திருட்டுப்பயல் ஓடிப் போய் விட்டான்!" என்று பரபரப்புடன் கூறி விட்டுத் தன் பெட்டி இருந்தபக்கம் நோக்கினான். அவனுடைய பெட்டி பத்திரமாய்த்தான் இருந்தது.

போலீஸ்காரன் கேலியாய்ச் சிரித்தான். "டேய்! நான் சர்விசுக்குவந்து வருஷம் பதினஞ்சு ஆச்சு. என்னை மடையனாக்கிறயே, அண்ணாச்சி! அந்தக்கதையையெல்லாம் போலீசு டேசன்லே போயிப் பேசிப்போம். உன் பெட்டியை எடு."

"நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரணுமா?.... உனக்குச் சரியான பைத்தியந்தான் பிடித்திருக்கிறது." என்று கூறிவிட்டுச் சேகரன் பக்கத்தில் இருந்தவரிடம், "ஏன், ஸார், போலீஸ் ஸெர்வீஸிலே எடுத்துக்கொள்வதற்கு முன்னால் மூளைப்பரிசோதனை செய்வது கிடையாதோ? அல்லது மனுஷனுக்கு ஸெர்விஸுக்கு வந்த அப்புறம் பைத்தியம் பிடித்திருக்குமோ? இருக்கலாம். சில கேஸ்களிலே ஆபீஸர்கள் படுத்துகிற பாட்டில் கீழ்த்தர உத்யோகஸ்தர்களுக்குப் பைத்தியம் பிடிப்பதும் உண்டு......"

"டேய்! என்ன ஊர்க்கதை பேசி காலத்தை வளத்தறே! பெட்டியை எடுத்துண்டு கீழே இறங்கு, இல்லாவிட்டால் மரியாதை போய் விடும்!"

"ஓகோ! இத்தனை நாழி நீ அடிச்ச கூத்தெல்லாம் மரியாதைப் பண்பு மீறாமல் நடந்ததாக்கும். சரிதான், வடக்கேயெல்லாம் மரியாதை என்றால் வேறே அர்த்தம்போல இருக்கு."

"எங்கே! உன் பெட்டி எது? காட்டு!"

சேகரன் மௌனமாய்த் தன் பெட்டியைக் காண்பித்தான். இதுவரை அவனுடைய எதிரி கூட அவனை ஏகவசனமாகப் பேசியதில்லை. இது அவனுக்குப் புது அனுபவமாயிருந்தது. போலீஸ்காரர்களுக்கு டிரெயினிங் கொடுக்கும்போது "எடிக்கெட்"டை (மரியாதையை) ஒரு முக்கிய பாடமாக வைக்கவேண்டும் என்று விரும்பினான். தான் இந்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரியாகும்போது இதை நிச்சயமாய்ச் செய்து விடுவதுஎன்று சங்கல்பித்துக் கொண்டான்.

இதற்குள் போலீஸ்காரன் பெட்டியைத் திறந்து வைர அட்டிகையைக் கையில் எடுத்து விட்டான். அவனுடைய முகம் வெற்றியினால் பிரகாசித்தது.

சேகரனுக்கு இப்போதுதான் தன் முழு நிலைமையும் புரிந்தது. நடராஜன் தப்பித்துக் கொண்டு போனதுமல்லாமல் தன்னையும் போலிஸில் காட்டிக்கொடுத்துவிட்டான்! அடாடா! என்ன முட்டாள்தனம்! நல்லபாம்பைப்போல் விஷசித்தம் உள்ள நடராஜனை நம்பிக் கண்ணயர்ந்தது எவ்வளவு வடிகட்டின மடத்தனம்! சேகரன் தன்னையே தேற்றிக்கொண்டான். உண்மையில் நடராஜனை நம்பியா அவன் ஏமாந்துபோனான்? இல்லை. நடராஜனிடம் அவனுக்கு அணுவளவுகூட நம்பிக்கை இல்லை. இந்தப்பாழாய்ப்போன தூக்கம் சமயசந்தர்ப்பந் தெரியாமல் வந்து எல்லாவற்றையும் கெடுத்து விட்டது.

கான்ஸ்டேபிள் சேகரனின் கையை வெடுக்கென்று இழுத்தான்.

"நான்ஸென்ஸ்! உன் கையை என் மேலே வைக்காதே! பாபம்! ராமேச்வரத்திற்குப் போகக்கூட என்னிடம் பணம் கிடையாது," என்று அவன்மேல் எரிந்து விழுந்துகொண்டே சேகரன் வண்டியைவிட்டுக் கீழே இறங்கினான்.

"ஆசாமியைப் பார்த்தால் திருடன் போலத் தோணவேயில்லையே!" என்று ஆச்சர்யப்பட்டார் வண்டிக்குள்ளிருந்த ஒரு மீசைக்காரர்.

"இந்தக்காலத்திலே யாரை நம்ப முடிகிறது? ஆளைப்பார்த்து ஒன்றும் முடிவுகட்ட முடியாது." என்றார் ஒரு வெண்தாடிக்காரர். (அவருடைய உதடு அசைவது ஸ்தூலக் கண்களுக்குப் புலப்படமுடியாமல் சுவேதாரண்யம்போன்ற தாடிப் பிரதேசம் மறைத்தபோதிலும் சப்தம் வந்த திசையைக்கொண்டு அவர்தான் அந்த வார்த்தைகளை உச்சரித்திருக்க வேண்டும் என்று மற்றவர்கள் முடிவு கட்டினார்கள்.)

"மார்! நா ஒண்ணு மொள்றேன். இண்ட காழுட்டிலே ஆழையும் நம்பமுழியாது" என்று

பக்கத்திலிருப்பவர்மேல் புகையிலே எச்சில் விழாமல் இருப்பதற்காக முகத்தை உயர்த்திக் கொண்டு பேசினுர் மற்ருெருவர்.

"அதுசரி, சார்! அந்த ஆளு—அவருபக்கத்திலே உட்கார்ந்திருந்தாரே—அவர் எழுந்துபோனதை நான் கவனிக்கவேயில்லையே? அவரோடேயே வந்த ஆசாமி எதற்காக எழுந்திருந்து போகணும்?"

சுவேதாரண்யத்திலிருந்து (தாடிக்காரரிடமிருந்து) மறுபடியும் சப்தம் எழுந்தது. "இரண்டு பேரும் திருட்டுப் பசங்கள். அதிலே சந்தேகமே கிடையாது. எங்கேயோ ரெண்டு பசங்களும் கொள்ளையடிச்சிருக்கிறுன்கள். அந்தப் பிரிச்சுக்கிறத்திலே அவங்களுக்குள்ளே சண்டை வந்திடுச்சு, ஒத்தனை ஒத்தன் காட்டிக்கொடுத்துட்டான்!" என்று சுருக்கமாக ஞானதிருஷ்டியைக் கொண்டு சென்றகாலத்தை எடுத்துச்சொல்லும் ரிஷி சிரேஷ்டர்போல சுவேதாரண்ய தாடிக்காரர் எடுத்துச்சொன்னுர்.

"அவ்வளவுதான் ஷங்கடி!" என்று ஆமோதித்தார் புகையிலைக்காரர். (அவர் பக்கத்திலிருந்தவர் புகையிலை அபிஷேகத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவ்விடத்தை விட்டு எழுந்து வேறிடத்திற்குச் சென்ருர்.)

சேகரன் கான்ஸ்டேபிளிடம் மெதுவாகக் கெஞ்சும் குரலில், "ஏம்பா! இதேவண்டியிலே என் சிநேகிதன் ஒருவன் இரண்டாவது வகுப்பிலே வரான். என்னுடன் தயவுசெய்து அவன் இருக்கிற வண்டிக்கு வா. அப்போ உனக்கு விஷயம் தெளிவாக விளங்கும். ஒரு துஷ்டனின் மோச வலையில் நான் அகப்பட்டுவிட்டேன், நான் திருடனில்லை" என்ருன்.

"முடியாது, எந்த சிநேகிதனையும் நீ பார்க்க முடியாது. என்கூட ஸ்டேஷனுக்கு வா. வேறு ஒன்றும் பேசாதே!" ஒரு குற்றவாளி தன்னை ஒன்று கேட்டுத் தானும் சரி என்று சொல்லி விடுகிறதா? இது போலீஸ் விதிகளில் இல்லை.

"அது கிடக்கட்டும். நான் திருடன் என்று உனக்கு யார் சொன்னது? சற்று முன் ஒரு ஆசாமி ஸ்டேஷனுக்குவந்து என்னை திருடன் என்று உன்னிடம் கூறிய பிறகுதானே நீ என்னைப் பிடிக்கவந்தாய்?

நடந்ததை அப்படியே சொல்வதைக்கண்டு போலீஸ்காரன் ஆச்சர்யமடைந்தான். சேகரன் சொன்னதை அவனுல் வெளிப்படையாக மறுக்க முடியவில்லை.

"ஆமாம்......ஒரு ஆள்தான் சொன்னுன்!"

"அவன் எப்படியிருக்கிருன்?.........குள்ளமாக இருந்தானு, இல்லையா?"

"குள்ளமாகத்தான் இருந்தான்."

"குள்ளநரி ராஸ்கல்! பேசும்போது கண்ணைச் சிமிட்டினுனு?"

"ஆமாம்!"

"அவன் இப்பொழுது எங்கே?"

இதற்குள் அவர்கள் ரெயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்குள் வந்துவிட்டார்கள்.

"அவனை இங்கேதான் இருக்கச் சொன்னேன்" என்றான் கான்ஸ்டேபிள்.

"அவன் இங்கே இருக்கமாட்டான். இதற்குள் ஓடியே போயிருப்பான்!" என்று ஆத்திரத்துடன் சொன்னான் சேகரன்.

சேகரனைக் கூட அழைத்துக்கொண்டே கான்ஸ்டேபிள் நடராஜனைத் தேடினான்; நடராஜனைக் காணவில்லை.

"ஆமாம்! உன்னைப்பிடிக்கச் சொல்லிவிட்டு அவன் ஓடுவானேன்?" என்று போலீஸ்காரன் ஆச்சர்யத்துடன் கேட்டான்.

"பேஷ்! உனக்கு இவ்வளவுதூரம் யோசனை செய்யவாவது புத்தி இருக்கே, அப்பா!......... ஆச்சரியந்தான்!............அவன்தான் உண்மையான திருடன். அவனை நான் பம்பாயில் பிடித்தேன். என்கூடவே அழைத்துக்கொண்டு வந்தேன்!......"

போலீஸ்காரன் யோசித்துப் பார்த்தான். அது சரி! அவனைப் பம்பாயிலேயே போலீஸில் பிடித்துக்கொடுக்காமல் எதற்காக உன்னுடன் அழைத்துக்கொண்டு வரவேண்டும்?"

"ஆ! அதுவா?...அது வந்து..."...தன்னுடைய காதலைப்பற்றியும் மற்ற சுய சரித வரலாறுகளையும் போலீஸ்காரனிடம் சொல்ல வேண்டாம் என்று அவனுக்குத் தோன்றியது. "அவன் அந்த நகையின் சொந்தக்காரருடைய உறவுக்காரன். அவனைப் போலீஸிலேபிடித்துக் கொடுத்தால் அவருக்குப் பிடிக்காதோ என்னமோ என்று அவரிடமே கொண்டுவிடலாம் என்ற உத்தேசத்துடன் அழைத்துக்கொண்டு வந்தேன்..."

போலீஸ்காரன் சேகரனுடைய முகத்தை உற்றுப்பார்த்தான். சேகரனுடைய முகம் அவன் கெட்டிக்காரப் பேர்வழி என்பதைக் காட்டியது. கெட்டிக்காரப் பேர்வழிகள்தான் அநேகமாய்க் குற்றஞ் செய்கிறவர்கள் என்பது போலீஸ்காரனுடைய கட்சி. சேகரன் கெட்டிக்காரன். அதனால் அவன் குற்றம் செய்திருக்கக்கூடும். இதெல்லாம் போலீஸ்காரனின் மனதிற்குள் நடந்த தர்க்கம்.

போலீஸ்காரன் சேகரனை இன்ஸ்பெக்டர் முன்னால் நிறுத்தினான். இன்ஸ்பெக்டரிடமாவது தன்னுடைய வாதம் பலிக்கிறதா என்று சேகரன் சோதிக்க எண்ணினான். இன்ஸ்பெக்டரும் சேகரனை மேலும் கீழுமாகப்பார்த்தார். வைர அட்டிகையை ஒரு தடவை பார்த்தார்.

"என்னைப் பிடிக்கச்சொல்லி கான்ஸ்டேபிளை ஏவி விட்ட ஆசாமி காணவில்லை என்கிறான். அவன் ஏன் ஓடிப்போகவேண்டும் என்று யோசித்தீர்களா?...அதிலும் திருடனைக் காட்டிக்கொடுக்

கிறவனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும்போது அவன் ஏன் ஓடிப்போகவேண்டும்?''

இந்தக் கேள்விகளுக்கு இன்ஸ்பெக்டராலும் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை. கான்ஸ்டேபிளிடம் இருந்த விளம்பரத்துண்டின் மூலம் ராவ்பகதூர் நரஸிம்மத்தின் விலாசத்தைத் தெரிந்துகொண்டு "வைர அட்டிகை அகப்பட்டுவிட்டது, உடனே கிளம்பி வரவும்" என்று கதலீபுரத்திற்குத் தந்தி கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

* * * * *

பொழுது விடிந்தபிறகு வண்டி ஏதோ ஸ்டேஷனில் நிற்கும்போது ராமசாமி வண்டியிலிருந்து இறங்கி சேகரன் ஏறியிருந்த கம்பார்ட்மெண்டின் பக்கம் வந்தான். சேகரனையும் காணோம்! நடராஜனையும் காணவில்லை!

"இந்த வண்டியிலே ஏறியிருந்தவங்க இரண்டு பேரும் எங்கே, ஸார்?'' என்று ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டிருந்த ஒரு ஆசாமியைக் கேட்டான்.

"அதிலே ஒருஆளைப் போலீஸிலே புடிச்சிக்கிட்டு போயிட்டாங்க. இன்னொரு ஆளைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க!''

இன்னும் விசாரிப்பதற்குள் வண்டி கிளம்ப மணி அடித்துவிட்டது. ராமசாமி தன் கம்பார்ட்மெண்டுக்கு விரைந்தான்.

ராமசாமி போலீஸில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் ஆசாமி நடராஜனாகத்தான் இருக்கவேண்டுமென்றும், ஸ்டேட்மெண்ட் கொடுப்பதற்காக சேகரனும் போயிருக்கவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டான். ஆனால் சேகரன் நடராஜனைக் கதலீபுரத்திற்கல்லவா அழைத்துக்கொண்டு போகப்போவதாகச் சொன்னான்? ரயிலில் போய்க்கொண்டிருக்கும்போது நடுவில் இறங்கிப் போலீஸில் அவனைப் பிடித்துக்கொடுப்பானேன்? ஒருகால் நடராஜன் சேகரனிடமிருந்து தப்பியோட முயற்சி செய்திருக்கலாம். அவனை ஜாக்ரதையாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது கஷ்டம் என்று எண்ணிச் சேகரன் அவனைப் போலீஸில் ஒப்பித்திருக்கலாம். ஆனால் நடராஜனைப் போலீஸில் ஒப்புவிக்கப் போகுமுன்னால் அதே ரயிலில் வந்துகொண்டிருக்கும் ராமசாமியிடம் அவன் ஏன் சொல்லவில்லை?

ராமசாமியின் மனது மேற்கண்ட விதமெல்லாம் ஆராய்ந்துகொண்டிருந்தது. ஆனால் தெளிவான முடிவு ஒன்றும் கிடைக்கவில்லை. அவனுடன்கூட மங்களம் இல்லாவிட்டால் மறுபடியும் அவன் பூனாவுக்குத்திரும்பிப்போய் போலீஸ் ஸ்டேஷனில் விசாரித்திருப்பான். மறுநாளே சேகரனிடமிருந்து ஏதாவது தகவல் கிடைக்கும் என்று தன் மனதைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டான்.



எம். எல். ஏ:—எப்போது பார்த்தாலும் அதை ஏதுக்காக படித்துக்கொண்டிருக்கே..........''

(தொடரும்)

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்



பி. ஸ்ரீ.

31

சேரி தந்த செல்வம்

★

பூஞ்சோலைகள், காடுகள், குலை குலையாய்க் காய்த்திருக்கும் தென்னைகள், பழுத்துச் சொரியும் மரங்கள், வயல்கள், தோட்டங்கள், இடையிடையே மாட மாளிகைகள், குடி வளமும் பொருள் வளத்தோடு பொங்கிப் பொலிகிறது, இந்த ஊரைத் 'திருநீற்றின் விரிந்த பேரொளி நெருங்கிப் பரவியிருக்கும் ஊர்' என்றும் பெரிய புராணம் கூறுகிறது ஆகவே. சோழநாட்டின் ஒரு பகுதியாகிய மேற்கா நாட்டைச்சார்ந்த ஆதனூர் என்ற இந்த ஊரிலே இயற்கைச் செழிப்போடு பக்திப்பயிரும் பொருட் செல்வத்தோடு சிவநேசச் செல்வமும் செழித்து ஓங்கினவென்று கருதலாம்.

ஆனால் இதே ஊர்ப் புறத்தில் வயல்களின் பக்கத்திலுள்ள பெரிய கரையில், சுரைக் கொடிகள் படர்ந்த பழங் கூறைகளோடு குடிசைகளும் காணப்படுகின்றன:

பற்றியபைங் கொடிச்சுரைமேல்
படர்ந்த பழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல
நிறைந்துளதோர் புலைப்பாடி.

[புற்குரம்பை—புல்லுக் குடிசைகளாகிய. சிற்றில்—சில வீடுகள். புலைப்பாடி—புலைச்சேரி; தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்கள் ஒதுங்கி வாழும் சேரி.]

நாம் இப்போது 'பறைச்சேரி' என்பதைப் புலைப்பாடி என்கிறார் சேக்கிழார். இந்தச்சேரி ஊரின் பகுதியல்ல: ஊருக்கு வெளியே தான் இருக்கிறது எனினும் ஊருக்கு உழைத்துச் சோறு போடும் பாடி இது. இப்பாடியை வயல்கள் சூழ்ந்திருக்கின்றன. வயல்களில் உழைக்க வேண்டியவர்களல்லவா?——வயல்களின் நடுவிலேயே குடியிருந்து எப்போதும் வெகு ஜாக்கிரதையாக வயல்களில் உழைத்தும், வயல்களைப் பாதுகாத்தும் வருகிறார்கள். மருத நிலத்தின் அருமைக் குழந்தைகள்; ஆனால் இவர்களுடைய வாழ்வு எப்படியிருக்கிறது? 'இவர்களுக்கு வாழ்வே இல்லையோ?' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. 'நீங்கள் எப்படித்தான் வாழ்க்கை நடத்துகிறீர்களோ?' என்று கேட்டால், 'நாங்களா? வாழ்க்கை நடத்துகிறோமா? நாங்கள் வாழவில்லையே!' என்றுதான் இவர்கள் சொல்லக்கூடும்.

இந்தக் கதை நடந்த காலத்தில் தமிழ் நாகரிகம் உயர்ந்த நிலையில் இருந்ததென்பதில் சந்தேகமில்லை. பொருளாதாரத்துறை வளமாயிருந்தது. விவசாயமும் வாணிபமும் ஒருங்கே வளர்ந்தோங்கின. எனினும் வயல்களுக்கிடையே புலைப்பாடி உள்ளுக்குள்ளே நாகரிகம் பொதிந்து வைத்திருந்த வயிற்றுப்புண்போலிருந்தது.

அத்தகைய புலைப்பாடிகளில் ஒன்றைச் சேக்கிழார் பெருமான் காட்டக் காண்போம் அதோ 'பழங்கூரையுடைப் புற்குரம்பைச் சிற்றில்பல' என்று ஆசிரியர் புல்லால் வேய்ந்த பழங்கூரைகளோடு கூடிய சிறுகுடிசைகளின் தொகுதியைச் சுட்டிக் காட்டுகிறார். புலையர்கள் அக்கூரைகளை அடிக்கடி புதுப்பிக்க முடியாத பரம ஏழைகள்; ஆகவே அவை பழங்கூரைகளாகவே நிற்கின்றனவாம்.

வெயில், காற்று, மழை முதலான இயற்கை நிகழ்ச்சிகளால் பழங்கூரைகள் சிதைந்து விழுந்து விடக்கூடுமல்லவா? சேக்கிழார் சுவாமி, கூரைகள்மேல படர்ந்திருக்கும் பசுமையான சுரைக்கொடிகளைச் சுட்டிக் காட்டுகிறார். 'உண்ணச் சுரைக்காய் கிடைக்குமே' என்பதற்காகத்தான் சேரிவாசிகள் சுரைக்கொடிகளைப் படரவிட்டிருக்கிறார்கள் என்று நாம் முதலில் எண்ணக்கூடும். சேக்கிழாரோ,

பற்றியபைங் கொடிச்சுரைமேல்
படர்ந்த பழங் கூரை

என்று சொல்லிக் காட்டுகிறார். வெயில் மழைகளால் கெட்டுப்போகும் புற்களோடுகூடிய கூரைகள் சிதைந்து போகாதபடி அந்தப் பழங்கூரைகளைச்சேர்த்துப் பற்றிப் படர்ந்திருக்கின்றனவாம் சுரைக்கொடிகள். இதுதான் அக்கொடிகளை அப்படிப் படரவைத்ததற்கு முதலாவது காரணம். அடுத்தபடியாகச் சுரைக்காய்கள் உணவு தருகின்றன. மேலும், பாத்திரங்களாகவும் பயன்படுமல்லவா?

சரி, பூசனிக்கொடி முதலியவற்றை ஏன் படரவிட்டிருக்கலாகாது? அந்தக் கொடிகளும் படர்ந்து பழங் கூரைகளைச்

சேர்த்துப் பற்றிக்கொள்ளுமே? இதற்குத் தற்காலச் சிவநேசர் ஒருவர் சிவநேச செல்வரான சேக்கிழார் பெருமானின் திருவுள்ளம் கண்டு காட்டுவதுபோல் விடை கூறியிருக்கிறார். 'பூசுணி முதலிய போலச் சுரைக்காய்களை இவர்களின் பண்ணையாளிகள் விரும்பார்களாதலின், இவற்றின் விளைபொருள் இவர்களுக்கே முழுப்பயனும் தருவன' என்று சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு ஒன்றினிடையே இச் சைவத்திருவாளர் கூறியுள்ளார். உண்மைதான்: உண்மையான உண்மை மட்டுமல்ல, கொடுமையான உண்மையுங்கூட! நேரடியான பச்சைத் தமிழில், 'பூசணி முதலான கொடிகளைப் படரவிட்டால் அந்தக் காய்களைப் பெரும்பாலும் பகாசுரப் பேர்வழிகளான பண்ணை முதலாளிகள் வேலைக்காரர்களை அனுப்பிப் பறித்துக்கொண்டுபோய் விடுவார்கள். சுரைக்காய்கள் என்றால் "சைவசுத்த போஜனத்திற்குப் பொருத்தமில்லை" என்று விட்டு வைப்பார்கள். அதனால் இந்த முழுப்பயனாவது இந்த மருதநிலக் குழந்தைகளுக்குக் கிடைக்கும்' என்பது பொருள்.

போகட்டும்: பண்ணை முதலாளிகளின் இந்தச் சுரண்டல் கொள்கையைச் சேக்கிழார் குறிப்பிடுகிறாரோ, இல்லையோ?— நமக்கு நிச்சயமாய்த் தெரியாது. சுரைக் கொடிகளைக் குடிசைக் கூரைகள் மீது படரவிடும் ஏழைக்குடிசைகளை இன்றும் நமது நாட்டிலே காணலாம். சோழராஜ சக்கரவர்த்தியின் முதல் மந்திரியான சேக்கிழார் பெருமானும், பரம ஏழைகளான புலையர்கள் தங்கள் பழங் கூரைகளின்மீது சுரைக் கொடிகளைப் படரவிட்டிருந்த அந்தக் காட்சியை அந்நாளிலும் கண்டிருக்கவேண்டும். காட்சி கண்டு காரணத்தையும் ஆலோசித்துப் பார்த்திருக்கவேண்டும். 'ஐயோ, என்ன ஏழைமை! செடி கொடிகளைப் பயிர் செய்ய வேறு இடம் இல்லாமல் கூரைமேல் படரவிட்டிருக்கிறார்களே!' என்று எண்ணி இருப்பார் 'சிறு இடத்திலே இப்படிப் பல குடிசைகளை நெருக்கிக் கட்டும்படி, எஜமானர்களுடைய வயல்களும் வாழ்வும் இந்த ஜனங்களை இப்படி நெருக்குகின்றனவா?' என்று கூடச் சேக்கிழார் பெருமானின் பொன்னான உள்ளம் 'புண்ணாகி'யிருக்கலாம்!

இது ஆதனூர்ப் புலைச்சேரி; நாகரிக வாழ்க்கைக்கு உரிய வசதிகள் உள்ள இப்பழைய தமிழ்க்கிராமத்திலே, உழுதொழில் செய்து உணவு தந்த புலையர் மாத்திரம் விரிந்த அறிவும் பரந்த அனுபவமும் பெறாமல் சிறு குடிசைகளில், சேற்றில் நண்டுகள்போல், வாழ்ந்து வருகிறார்கள்! அதிகாலையில் கோழி கூவ விழித்துக்கொண்டு வேலை செய்யத் தொடங்கியவர்கள், இரவு வரை உழவுமாடுபோல் ஊருக்கு உழைத்து வருகிறார்கள். நிலத்தைப் பண்படுத்துவதில் தம்மை முழுக்க இழந்தவர்களுக்கு மனத்தைப் பண்படுத்துவதற்கு வசதியாவது அவகாசமாவது சமுதாயம் அளிக்கவில்லையென்றுதான் ஊகஞ் செய்யவேண்டும்.

இவர்கள் வாழ்க்கையை வளர்ந்தோங்கச் செய்யும் நிலையில் சுற்றுப் பொருள்களும் அமைந்திருக்கவில்லை. கோழி முதலிய பட்சிகளும் நாய்களும் புலைச்சேரியைக் கூட்டங் கூட்டமாகச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. தென்னைகளுக்கருகே நாய்கள் குட்டிபோட்டிருக்கின்றன. வஞ்சி மரங்களின் நிழலில் அமைந்த கூடுகளில் கோழிகள் முட்டையிட்டு அடைகாத்துக்கொண்டிருக்கின்றன. வலைகள் தூக்கிய முற்றத்திலே வேட்டைநாய்கள் காவலாக நிற்கின்றன.

அந்த நாய்களின் குட்டிகள் அங்குமிங்கும் துள்ளி விளையாடுகின்றன. அந்த விளையாட்டில் சேரிச்சிறுவர்களும் கலந்துகொண்டு நாய்க்குட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள். அப்போது குட்டிகள் மிருதுவாய்க் குரைக்கின்றன. அந்தக் குரைப்பை அடக்கிவிடுகின்றனவாம் ஓடும் சிறுவர்களின் அரையில் கட்டிய இருப்புமணிச் சதங்கைகள்:

ஆர்சிறுமென் குரைப்படக்கும்,
அரைக்கசைத்த இருப்புமணி

[ஆர் சிறுமென் குரைப்பு—(நாய்க்குட்டிகளின்) நுண்ணிய சிறிய மெல்லிய குரைப்பு. அரைக்கு அசைத்த-(சிறுவர்களின்) அரையில் கட்டிய. இருப்பு—மணி, இரும்பு மணி; (இங்கே) இரும்பால் செய்த மணிகள் கோத்த சதங்கை.]

குடிசைகளிலும் வயல்களுக்குப் பக்கத்திலும் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார்களாம் புலைச்சியர். இக்குழந்தைகளை மருதமர நிழலில் உறங்கச்செய்து வேலைக்குப் போகிறார்கள்.

இத்தகைய அடிமை வாழ்க்கையில் வேலை முடிந்தபின் அற்பமாகவாவது ஓய்வு-நேரம் கிடைக்கக் கூடுமே. அப்படிப்பட்ட நேரங்களில் புலைச்சியர் நெற்கதிர்களைக் கூந்தலில் அலங்காரமாகச் சூடிக்கொண்டு, குடித்துவிட்டுக் கூத்தாடுகிறார்கள். புலையர்களும் அந்த ஓய்வு நேரங்களில் அமிதமாக அமிர்தபானம் செய்கிறார்கள்! பரிபாஷையில்லாமல் பச்சைத் தமிழிலே கள்ளை உள்ளே தள்ளிவிட்டு அறிவை வெளியே தள்ளிவிட்டு, கவலைகளையும் தூவென்று தள்ளிவிட்டு மாமரங்களில் தூக்கியிருக்கும் பறைக் கொட்டுகளை எடுத்து வந்து புலைச்சியரின் கூத்துக்கு இசைய அடித்து முழக்குகிறார்கள் புலையர்கள்.

இந்த 'நாட்டியக் கச்சேரி'யையும் சேக்கிழார் கண்டிருக்கிறார்: அனுதாபத்துடன் கண்டு நமக்கும் காட்டுகிறார்:

விள்ளும்பைங் குழற்கதிர் நெல்
மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக்,
கறங்கு பறை யும்கலிக்கும்!

[பைங்குழல்-பசிய கூந்தலிலே. மிலைச்சிய-சூடிய. களி தூங்க—களிப்பால் கூத்தாட. கறங்கு—(அதற்கு இசையப்புலையர்களால்) அடிக்கப்படும். கலிக்கும்-சப்திக்கும்.

இத்தகைய புலைச்சேரியில் பிறந்து வளர்ந்தவர்தாமும் பிரசித்தி பெற்ற நந்தனார்.

மெய்ப்பரிவு சிவன்கழற்கே
விளைத்த உணர் வொடும் வந்தார்
..
..
ஒப்பிலவர் நந்தனார்
என ஒருவர் உளரானார்

[பரிவு-அன்பு. கழற்கே-திருவடிகளுக்கே. ஒப்பிலவர்-ஒப்பில்லாதவர்.] இயற்கை மேதையோடு பிறந்த இவர்-ஓதாதுணர்ந்த இந்த உத்தம ஞானி-சேரிதந்த செல்வம் என்றால், சிவகிருபையின் மாட்சியை என்னென்பது?

———

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

8

பருவம் மாறினால் அழுவதா?

★

தென்றலும் சிறு துளியும் கலந்து வீசும் வசந்த காலம். அதிக உஷ்ணமும் அதிகக் குளிரும் இல்லாததால் எல்லோருக்கும் இன்பகரமாகவே இருக்கிறது. ஆனால் அப் பருவம் நிலைத்திருப்பதில்லையே! உடனே மழைகாலம். அது நீங்கப் பனி மிகுந்த குளிர் காலம். அது நீங்கி வெப்பம் மிகுந்த கோடைகாலம் என்று பருவ நிலைகள் மாறிக் கொண்டே போகின்றன. 'வெப்பம் தாங்க முடியாத கோடை வரப்போகிறதே. என்ன செய்வது' என்று ஒருவன் அழுதால் பயன் உண்டா? அதனால் வரப் போகும் பருவம் வராது தடைப் பட்டு நிற்குமா?

அவ்வாறே, தோன்றிய உடல் சிறிது காலத்திற்கு வளர்ந்து கொண்டே போகும் பால்யப் பருவத்தைப் பெற்றிருக்கிறது. பின்னர் வளராது முன்னைய நிலையிலேயே பெற்ற வலிமையும் தோற்றமும் குன்றாது சிறிது காலத்திற்கு இளமைப் பருவத்தை அடைந்து நிற்கிறது. முடிவில் வலிமையும் அழகும் குறைந்து கொண்டேபோகும் முதுமைப் பருவத்தை அடைகிறது. பால்யம் இளமை மூப்பு என்று உடலுக்கு இவ்வாறு மாறிவரும் பருவங்களைத் தடுக்க முடியுமா? மாறப்போகிறதே என்று மனம் கலங்குவதா? 'இதே போன்ற நிகழ்ச்சிதான் மரணத்தின்போது உயிருக்கும் சம்பவிக்கிறது' என்கிறார்.

இந்த வுயிர் கௌமாரம்
யௌவனம் மூப் பென்பவற்றை
வந்த உடல் நின்று
மருவுதல்போல்—அந்த உயிர்
வேறுடல மேவுதலு
மித்தன்மைய தாங்கதனைத்
தேறுமவர் தாம்
கலங்கார் தீர்ந்து.

(இ-ள்) இந்த உயிர்— பிறந்தான் இறந்தான் எனப்படும்) இந்த உயிர், வந்த உடல் நின்று—(பிறப்பில் தனக்கு) கிடைத்த தேகத்தின் மூலமாக, கௌமாரம்—பால்யப் பருவம், யௌவனம்-இளமை அல்லது மத்தியப் பருவப், மூப்பு—கிழப்பருவம், என்பவற்றை—என்ற நிலைகளை, மருவுதல் போல்—அடைவதுபோல் அந்த உயிர்—(முன் குறிக்கப் பட்ட)அந்த உயிர், வேறு உடலை மேவுதலும் இத்தன்மையது—வேறு தேகத்தைப் பெறுவதும் இது போன்றதே, அதனை தேறும் அவர்—அந்த உண்மையைத் தெளிந்துகொண்டவர், தீர்ந்து—(தடுக்கமுடியாத நிகழ்ச்சி என்று) உணர்ந்து, தாம் கலங்கார்—தாங்கள் கவலைப்படமாட்டார்.

3 2 3
தேஹிநோஸ்மிந் யதா தேஹே
கௌமாரம் யௌவநம் ஜரா
2 3
ததா தேஹாந்தரப்ராப்தி:
4
தீர: தத்ர நமுஹ்யதி

(இ-ள்) அஸ்மிந்தேஹே-இந்த சரீரத்தில், தேஹிந:—சரீரியான உயிருக்கு, கௌமாரம்—பால்யமும், யௌவனம்—வாலிபமும், ஜரா—கிழத்தனமும். யதா—எப்படியோ, ததா—அப்படியே, தேஹாந்தர ப்ராப்தி:—வேறு தேஹம் வருவதும் ஆகும், தத்ர—அவ்விஷயத்தில், தீர:—புத்திமான், நமுஹ்யதி— மோகமடையமாட்டான்.

உடல் ஒரு பருவத்தை விட்டு வேறு பருவத்தைப் பெறுவது போல் உயிர் மரண காலத்தில் ஒரு உடலை விட்டு வேறு உடலை அடைகிறது. காரில் ஒருவன் சென்றுகொண்டே இருக்கிறான். நாளடைவில் காரின் உறுப்புகள் தேய்ந்து போகின்றன. உபயோகத்திற்குத் தகுதி இல்லாமல் போகிறது. அந்த நிலையில் உபயோகித்த காரை விட்டுவிட்டுப் புதிய காரை வாங்கி உபயோகிக்கவில்லையா? பழைய வீட்டை விட்டுப் புதிய வீட்டில் பிரவேசிப்பதில்லையா? அதேபோல் உயிரும் புதிய தேகத்தைக் கிரகிக்கிறது. இதில் எல்லாப் பருவங்களையும் உடல் அடைந்து அனுபவித்தபின் தான் அதை விட்டுப் புதிய உடலை உயிர் பற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. உயர்ந்த விலையுள்ள காரைத் தனக்கென்று வைத்துச் சமாளிக்க முடியாதவர் என்ன செய்கிறார்கள்? கார் நல்ல நிலையில் இருக்கும்போதே அதைக் கொடுத்துவிட்டு மட்ட ரகமான வேறொன்றை வாங்கிக்கொள்ளுகிறார்கள். வசதி அதிகம் உள்ளவர்கள் உள்ளதை விட்டு அதைவிட விலை உயர்ந்ததொன்றை வாங்கிக் கொள்கிறார்கள். தேய்வும் அழிவும் வீட்டிற்கோ அல்லது வாகனத்

திற்கோ வந்தாலும் அவற்றை யுடையவனுக்கு வருவதில்லை. அதேபோல பருவ மாறுதல்களும் பிறப்பு இறப்பும் தேகங்களுக்கு வந்தாலும் அவற்றைப்பெற்றிருக்கிற உயிருக்கு ஒன்றும் ஏற்படுவதில்லை. உயிர் எத்தகையது?

நில்லா வுடலகத்து நிற்குமுயிர்
சத்ததனால்
இல்லாததுக்கு உண்மை இல்லை
உண்மைக்—கில்லாத
தென்று இரண்டின் ஈறு
கண்டேய்ந்தவந் தத்துவத்தை
நின்று என்றுங் காண்பார்
நிகழ்ந்து

(இ-ள்) நில்லா உடல் அகத்து—அழியும் தன்மை வாய்ந்த உடலில், நிற்கும் உயிர்—நிற்கின்ற உயிர், சத்து—சத்து அல்லது உண்மையாகச் சொல்லப்படுகிறது, அதனால்—ஆகையால், இல்லாததுக்கு உண்மை இல்லை—அசத்து எனப்படும் இல்லாப் பொருளுக்கு உண்மை நிலை இல்லை, உண்மைக்கு இல்லாதது இல்லை—சத்திற்கு இன்மை நிலை இல்லை, என்று இரண்டின் ஈறு கண்டு—என்று பொருள்களின் இருவேறு நிலைகளை ஆராய்ந்து, ஏய்ந்த தத்துவத்தை—பொருந்திய உண்மையை (பெரியோர்) நின்று நிகழ்ந்து—பெரியோர்கள் நிதானமாய் உறுதியாய், என்றும் காண்பார்—எப்பொழுதும் அறிந்து கொள்வார்கள் (குறிப்பு உண்மைக்கு இல்லாதது இல்லை, பெரியோர், கோடிட்ட சொற்களை வருவித்தே பொருள் கொள்ள வேண்டும்.)

3 4
நாஸதோ வித்யதே பாவோ
4 3
நாபாவோ வித்யதே ஸத:
4 3
உபயோரபி த்ருஷ்டோந்த ஸ்த்வ
3 4
நயோ ஸ்தத்வ தர்ஸிபி:

(இ-ள்) அஸத:—இல்லாததற்கு, பாவ: நவித்யதே-இருப்பு இல்லை. ஸத:—ஸத்துக்கு ஆத்மாவுக்கு, அபாவ: நவித்யதே—இன்மை இல்லை. அநயோ: உபயோ:—இவ்விரண்டுக்கும், அந்த:—பொருள்களின் நிலை இதுதான் என்ற) முடிவு. தத்வ தர்சிபி:—தத்வமறிந்தவர்களால், த்ருஷ்ட:—கண்டுகொள்ளப் பட்டது.

தத்துவ தரிசிகள் பொருள்களை நித்தியம், அநித்தியம் என்று இரண்டாகப் பிரித்துக் கூறுகிறார்கள். நித்தியப் பொருள் ஸத்து என்றும் அநித்யப் பொருள் அஸத்து என்றும் சொல்லப்படுகின்றன. 'ஸத்து அஸத்தாகவோ அஸத்து ஸத்தாகவோ எந்நாளும் ஆகமுடியாது' என்று ஞானிகள் உறுதியாக அறிவார்கள். தேகத்தையுடைய உயிர் நித்தியப் பொருளாகிய ஸத்தாகையால் மரணத்தால் அவனுக்கு இன்மை நிலை வராது. மாறுதலும் வராது. அதனால் ஒருவன் மரணம் அடையும் காலத்தில் அவனைச் சார்ந்தோர் அவனது உயிரைக் கருதி வருந்த இடமே இல்லை உடலை எண்ணி வருந்தலாமா? கூடாதா? விடையை வரும் கவியில் காணலாம்.

மாயாது அளவின்றி மன்னும்
சரீரிதனக்கு
ஓயாது மாறும் உடலம் இவை
—மீயாரும்
அந்தம் உடைய எனும் ஆதலி
னால் பார்த்தனே!
இந்த அமர்முயல்வாய் இன்று.

(இ-ள்) மாயாது—அழியாமல், அளவு இன்றிமன்னும்-முக்காலங்களிலும் நிலைபெற்றிருக்கும், சரீரிதனக்கு உயிருக்கு, உடலம் ஓயாது மாறும்—தேஹங்கள், ஓயாமல் மாறிக்கொண்டேயிருக்கும். தேஹங்கள். மீ ஆரும் அந்தம் உடைய எனும் ஆதலினால்—மிக்க நாசமுடையனவாய் இருப்பவை ஆதலால் பார்த்தனே!—அர்ஜுனா!, இந்த அமர் இன்று முயலவாய்—(மேற்கொண்டு) இந்த யுத்தத்தை இப்பொழுதே ஆரம்பிப்பாயாக.

3
அந்தவந்த இமே தேஹா
நித்யஸ்யோக்தா ஸ்ஸரீரிண:
அநாஸிநோ ப்ரமேயஸ்ய
4 4
தஸ்மாத் யுத்யஸ்வ பாரத.

(இ-ள்) அந்தவந்த:—நாசமுடைய, இமே தேஹா:—இந்தச் சரீரங்கள், நித்யஸ்ய-நித்தியனும், அநாஸிந:—நாசமில்லாதவனும், அப்ரமேயஸ்ய-(ஐம்பொறி உணர்வால்) அறிய முடியாதவனுமான, சரீரிண:—சரீரியாகிய உயிருக்கு. உக்தா:—(பல மாறி மாறிவரும் என்று) சொல்லப்பட்டன, தஸ்மாத்—ஆகையால், பாரத!—அர்ஜுனா! யுத்யஸ்வ—யுத்தம் செய்வாயாக.

போரில் கொல்லப்படுவோரின் உடலங்கள் இயக்கம் இல்லாமல் விழுகின்றன. நாளடைவில் அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடுகின்றன. அவ்வாறு அழிவதற்குக் கொல்வோனே பொறுப்பாளியாவதால் அழித்ததை நினைத்து வருந்த இடம் உண்டே என்ற சங்கையைக் கண்ணன் பரிகரிக்கிறார். தேகம் அஸத்து வகையைச்சார்ந்ததாகையால் தானே அழிந்து இன்மையாய்ப் போகும். அழியாத ஸத்தாகிய உயிரும் உடனே புதிய தேகத்தை அடையும். இவ்வாறு உயிருக்கு உடல் மாறுவதும் பழைய உடல் அழிவதும் முடிவில்லாமல் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளேயாதலால் சுயதர்மம் காரணமாகப் போரை மேற்கொண்டு எதிரிகளைக்கொல்வோன் தேகத்தை அழிக்கும் குற்றத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டான். போரில் மரணமடைவோருக்குப் புதிய உடலும், அவரவர் கருமத்திற்கேற்ப உயர்ந்த நிலையோ தாழ்ந்த நிலையோ உடனே வருவதால் அபிமானம் காரணமாக உடலை நினைத்தும் வருந்த வேண்டியதில்லை 'ஆதலால் புகழைத்தரும் யுத்தத்தை இப்பொழுதே செய்ய முற்படு' என்று அர்ஜுனனுக்குக் கூறினார்.

அர்ஜுனனோ அப்பொழுதும் போரை மேற்கொள்ளவில்லை. 'ஸத்தாகிய உயிரின் தன்மை யாதோ?' என்று நினைத்துப் பின்னும் கலங்கினான். மரணம்வரை உடல் இயங்கக் காரணமாக இருப்பது உயிரல்லவா? அதன் ஸ்வரூபத்தை அர்ஜுனன் கண்டதும் இல்லை, அறியவும் இல்லை. அது எவ்வாறிருக்குமோ என்ற எண்ணங்கள் அவன் மனதில் அலையலையாக எழுந்தன. மரணத்தின் போது உடலைப்பற்றிவரும் பயம் நீங்கியபோதிலும் தான் அறியாத உயிரைப்பற்றி வரும் பயமும், கலக்கமும் அர்ஜுனனுக்கு நீங்கவில்லை. அதை அறிந்துகொண்ட கண்ணபிரான் உயிரின் ஸ்வரூபத்தைச் சொல்ல வாரம்பித்தார்.

—



இதுதான் ஜப்பானிய பார்லிமெண்டின் (டையட்) தோற்றம். தேசியப் பொது சேவைச் சட்டத்தைத் திருத்தியமைப்பது சம்பந்தமாக விவாதம் துவங்கியபோது அநேகம் மெம்பர்கள் சபைக்கு வரவில்லை

படத்தில் மண்டியிட்டு உட்கார்ந்திருப்பவர் ஏதோ படுக்கையில உட்கார்ந்திருப்பதாக எண்ண வேண்டாம்! அசுர ஸ்வரூபத்திலுள்ள சுரு மீனின் பிளந்த வாயில் உட்கார்ந்திருக்கிறார். ஜோபெரி என்ற மேற்படி செம்படவர் ராக போர்ட்டில் வலைபோட்டுப் பிடித்தார்.



மாதர் மகா சபை

குங்குமம்

'உனக்காகவே சீக்கிரம் சீக்கிரமாகவே வேலைகளை முடித்துக்கொண்டு வந்தேன்' என்றாள் பானுவைப் பார்த்து சரோஜா.

'என்னவோ திடீரென்று என்மீது 'இப்படிப்பட்ட ஒரு கருணை' என்றாள் சரோஜா.

'ஆமாம்! நீ இன்று ராத்திரியேவா போகிறாய்?'

'அதற்குள் நான் ஊருக்குப் போகிற சமாசாரத்தை உனக்கு யார் சொல்லிவிட்டார்கள்?'

'நேற்று யாரோ இவருக்குத் தெரிந்த சிநேகிதர் ஒருவர் சாப்பிட வருவதாகச் சொல்லியிருந்து வராமல் சாயங்காலம் வந்தாரென்று சொன்னேனே, அவர்தான் சொன்னார். அவர் பம்பாயிலிருந்து வருகிறாராம், உன் அகத்துக்காரருக்கும் வேண்டியவராம். அவரைத்தான் திரும்பி பம்பாயிக்கு வரும்போது உன்னை அழைத்துக் கொண்டு வரும்படி உன் அகத்துக்காரர் சொல்லியனுப்பியிருக்கிறாராம்.'

'அப்படியானால் ராத்திரியும் உங்களகத்தில் அவர் சாப்பிடவில்லையென்று சொல்.'

'பரவாயில்லையே உனக்குக்கூட யக்ஷிணி கடாட்சம் கிடைத்துவிட்டது!'

'இதற்கு யக்ஷிணி கடாட்சம் வேண்டுமா? ராத்திரி எங்களகத்தில் சாப்பிடும்படி அப்பா நிர்ப்பந்தித்தார், சாப்பிட்டார். நீ சொல்வதிலிருந்து அவராகத்தான் இருக்கவேண்டுமென்று தெரிகிறது.'

'அவரேதான்.'

'வசந்தாகூட நாளைக்கோ, மறு தினமோ போகிறாளாமே?' என்றாள் ருக்கு.

'சாந்தா கூடத்தான் போகிறாள்' என்றாள் சாந்தா.

'எல்லாரும் போகும்போது நான் மாத்திரம் இங்கேயே இருக்கப் போகிறேன் என்று நினைக்கிறீர்களா? 'இவருக்கு' (அகமுடையானுக்கு) அடுத்த வாரத்திலிருந்து ஒருமாதம் லீவ் கிடைத்திருக்கிறதாம். பத்ரிகாச்ரமம் போய்வருவதாக உத்தேசம்' என்றாள் விமலா.

'இங்கே எங்கள் பாடுதான் கஷ்டம். வீடே வெறிச்சென்று போய்விடும்' என்று சொல்லிவிட்டு ஏன்? நீ எங்கேயும் போகவில்லையா?' என்று சரோஜாவைப்பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'அவர்கள் ஊருக்குப் போவதும் ஒன்றுதான், நான் இங்கேயே இருப்பதும் ஒன்றுதான். என்றாள் சரோஜா.

'ஏன் அப்படி?'

'அடுத்த வாரம் எங்கள் அகத்தில் ஒரு பட்டாளம் வந்து இறங்கப்போகிறது, எனக்கு மூச்சுவிட ஒழியப் போகிறதில்லை.'

'யார் அது?

'எங்கள் நாத்தனாருக்கு வயிற்றில் ஏதோ கோளாறாம், அங்கே வைத்தியம் ஒன்றும் சுகப்படவில்லையாம் ஆகவே இங்கே வரப்போகிறாள். அதற்கு சகாயத்துக்கு எங்கள் மாமியார் வரப்போகிறாள். மாமனார் தனியாக இருக்கமாட்டார் அவரும் வரப்போகிறார்.'

'உன் நாத்தனாருக்கு இரண்டோ மூன்றோ பசங்கள் இல்லையா?'

'நாலு பசங்கள். எல்லாம் வரப் போகிறதுகள். ஒரு மாஸமோ, இரண்டு மாஸமோ வீடு ஒரே அமர்க்களப்படப் போகிறது. இந்த அமர்க்களத்தில் எனக்கு எங்கே வர ஒழியப் போகிறது?'

'சரி, கொஞ்ச நாளைக்கு நாம் விடை பெற்றுக்கொள்ள வேண்டியதுதான். அது கிடக்கட்டும். மஞ்சுளாவின் அகமுடையான் என்ன சொல்லுகிறதாம்? அதைச் சொல்லு முதலில் என்றாள் பானு.

'அதைச் சொல்லுவதற்காகத் தானே கொஞ்சம் முன்ன

தாகவே வந்தேன். மஞ்சுளாவின் அகமுடையானுக்கு மஞ்சுளாவின் மேல் உள்ள பிரீதியை இவவளவு அவ்வளவென்று சொல்லமுடியாதாம். மஞ்சுளாவைத் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாட வேண்டுமென்று ஆசையாம். அரை செகண்டு மஞ்சுளாவை விட்டுப் பிரிந்திருக்க சம்மதிக்காதாம்' என்ருள் சரோஜா.

'அதெல்லாம்தான் அது எழுதிய கடிதத்திலிருந்து நன்ருகத் தெரிகிறதே. அப்படியிருக்க மஞ்சுளாவுக்கு என்ன குறை என்று கேட்கிறேன்' என்ருள் பானு.

'அதுதானே வேடிக்கை. அதனுடைய பெற்ருேர்கள் எதிரில் அது நடந்துகொள்ளும் விதத்தை மூன்ருவது மனிதர்கள் யாராவது பார்த்தால் மஞ்சுளாவிடம் அதற்கு ஆசையே இல்லைபோல்தான் தோன்றுமாம். மகா சங்கோஜி பாவம்! அதுவே அடிக்கடி சொல்லுமாம். 'இந்தக் காலத்து பசங்களைப்போல் சகஜமாகப் பழகலாமே. அதென்னவோ நாலு பேர் எதிரில் பழகுவதென்ருல் ஏதோ தகாத ஒரு காரியத்தைச் செய்கிறமாதிரி ஒரு பயம் என்னை அறியாமலேயே ஏற்படுகிறது. அத்துடன் பெற்ருேர்களின் கட்சியை ஆதரிக்காவிட்டால் அவர்களுக்கு ஏதோ துரோகம் செய்துவிடுகிறமாதிரி ஒரு எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது. அதற்காகவே, நியாயமோ அநியாயமோ, அவர்கள் கட்சியைத்தான் ஆதரிக்க வேண்டியிருக்கிறது. நான் என்ன செய்வது? இதனால் நான் உனக்குத் துரோகம் செய்து விடுவதாக நினைத்துவிடாதே. என்னுடைய பிரபஞ்சமெல்லாம் நீதான். நீ விவேகியானதால் இதையெல்லாம் தெரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது. நோகாமல் அடிக்கிறேன்; ஓயாமல் அழு' என்ற பழமொழி தெரியாதா? அவ்

"...இன்று வென்னீர் வேண்டாம் என்று..."

வளவு தான் என்று மஞ்சுளாவினிடம் அடிக்கடி சொல்லிக் கஷ்டப்பட்டுக்கொள்ளுமாம். ஆனால் அதன் பெற்ருேர்கள் ஒன்றிரண்டு தினங்கள் எங்காவது வெளியூருக்குப் போய்விட்டால் அப்பொழுது பார்க்க வேண்டுமே அது அடிக்கிற கூத்தை 'தகப்பனருக்கு ரொம்ப ஆபத்தாக இருக்கிறது. இன்று ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறேன். நாளைக்கு ஆபரேஷன். ஆகையால் இன்றும் நாளையும் லீவ் கொடுக்க வேண்டும்' என்று ஆபீசுக்கு லீவ் லெட்டர் அனுப்பிவிடுமாம். அந்த இரண்டு தினங்களும்



'...புடவைதோய்ப்பேன் என்று...'

ஒரு நிமிஷம்கூட மஞ்சுளாவை விட்டுப் பிரிந்திருக்காதாம். வீட்டுக்குள் மஞ்சுளா போகிற இடமெல்லாம் போய்க்கொண்டு, அதன் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்குமாம். வெந்நீர் போட வெந்நீர் அறைக்குப் போனல், 'இன்று வெந்நீர் வேண்டாம். குளிர்ந்த ஜலத்திலேயே ஸ்னனம் செய்துவிடுகிறேன்' என்று சொல்லுமாம்.

அந்த நேரத்தை வீணுக்க இஷ்டமில்லை. சமையலறையில் அடுப்பை மூட்ட மஞ்சுளா, வறட்டியில் மண்ணெண்ணெயைக் கொட்டினல் அது தீக்குச்சியைக்கீறி அதைப்பற்றவைக்குமாம். அவள் அரிசி களைந்து வைத்தால் அது காய்கறி நறுக்கிக் கொடுக்குமாம். இத்தனை தினங்களாய் வேஷ்டியையே தோய்க்காதாம். அன்று குடுகுடுவென்று ஓடி மஞ்சுளாவின் புடவையையும் தோய்ப்பதற்காக எடுக்குமாம். 'நன்ருக இருக்கிறது! யாராவது பார்த்துச் சிரிக்கப் போகிருர்கள்?' என்று மஞ்சுளா சமையலறையிலிருந்து சொன்னல், 'யாரடி அவன் சிரிக்கிறவன்? ஆண்களுடைய வேஷ்டியைப்பெண்கள் தோய்க்கலாம்? பெண்களுடைய புடவையை ஆண்கள் தோய்க்கக்கூடாதோ? பெண்கள் முன்னேற்றம்பற்றித் தொண்டை கிழியக் கத்துகிருர்களே! பின் எதற்காம்? இன்று நான்தான் தோய்க்கப்போகிறேன்,' என்று பிடிவாதம் பிடிக்குமாம்.

'கோபாலன்!' என்று அதன் சினேகிதர்கள் யாராவது தெருவில் வந்து கூப்பிட்டால், 'சமயம் பார்த்துவந்தான்' இவன்களுக்கெல்லாம் வேலையென்ன? அயர்லாந்து பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து கத்தரித்துக் கொண்டு போனல் என்ன? பாலஸ்தீன் விவகாரத்தில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் அபிப்ராய பேதம் ஏற்பட்டாலென்ன? எப்படி குட்டிச்சுவராய்ப் போனு

லென்ன? இவர்களுக்கெதற்கு அந்த விசாரமெல்லாம். அப்படியே விசாரமிருந்தால் தொலையட்டும். நம்ம பிராணனை எதற்காக வாங்கியெடுக்கிறார்கள்! இவன்களுக்கெல்லாம் பெண்டாட்டி பிள்ளைகள் கிடையாதா? எங்கோ வெளியில் போய் இருப்பதாகச் சொல்லி அனுப்பிவிடு' என்று மஞ்சுளாவிடம் சொல்லியனுப்புமாம். தொணதொணவென்று எதையாவது பேசிக்கொண்டே ஒரு வேலையும் ஆகவிடாதாம். 'இன்று சமையல்ஆகி சாப்பிட வேண்டுமென்ற யோசனை உண்டா? இல்லையா?' என்று மஞ்சுளா லேசாக மிரட்டிப் பார்ப்பாளாம். 'இதோ ஹோட்டலில்போய் மாற்றிக்கொண்டு வந்துவிடுகிறேன்.' என்று கிளம்பிவிடுமாம். 'வேண்டாம், வேண்டாம். இதோ ஆகிவிட்டது. இப்படித் தொணப்புக் கொட்டினால், எப்படி வேலை ஆகுமென்றுதான் சொன்னேன்' என்று அதை நிறுத்துகிறபாடு 'தெய்வமறியுமாம்.! சாப்பிடுவதற்குத் தட்டை எடுத்துப்போட்டால் 'ஊஹூம்! தட்டுவேண்டாம். இன்றைக்குக் கூடவா தட்டு?' என்று சொல்லுமாம். 'அப்படியானால் இலையை அலம்பிப் போடட்டுமா?' என்றால் வேண்டாம்' என்று பதில் சொல்லுமாம். 'சாப்பிடப்போகிறீர்களா' இல்லையா? என்று கேட்டால் 'சாப்பிடப் போகிறேன்' என்று சொல்லுமாம். 'அப்படியானால் இலையோ, தட்டோ எடுத்துப் போட்டுக்கொள்ளுங்களேன்' என்பாளாம் மஞ்சுளா. 'நான் இன்று கையில்தான் சாப்பிடப் போகிறேன்' என்று சொல்லுமாம். 'அப்படியென்றால்?' என்று ஒன்றும் புரியாதவள்போல் கேட்பாளாம் மஞ்சுளா. அப்படி

''காய்கறி நறுக்கி ஒத்தாசையாக''

யென்றால் நீ சாதத்தைப் பிசைந்து என்கையில் போட வேண்டும். நான் சாப்பிட வேண்டும்' என்று சொல்லுமாம். 'ஒட்டு குழந்தையாயிற்றே' சாதத்தைப் பிசைந்து கையில் போடுகிறேன். ஏன், இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு 'ஜூ' காட்டி ஊட்டட்டுமா என்பாளாம். 'உம்!' என்று சொல்லிவிட்டு விகாரம் தட்டிய ஒரு சிரிப்பு சிரிக்குமாம். 'ஐயோ, பைத்தியமே! பேசாமல் உட்கார்ந்து தட்டைப் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டுப் போய்ச் சேருங்கள்' என்பாளாம் மஞ்சுளா. 'ஆமாம்! இதற்கே இவ்வளவு சொல்லிவிட்டாயே? உனக்கு இன்று யார் தலைவாரிப் பின்னி, பவுடர்பூசி கண்ணுக்கு மையிட்டு, நெற்றிக்குப் பொட்டு வைக்கப் போகிறார்கள் தெரியுமோ' என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டே லேசாக மஞ்சுளாவின் தாடையில் ஒரு தட்டு தட்டுமாம் 'போறுமே! யாராவது கேட்டுக்கொண்டு வரப்போகிறார்கள்? அம்மா, அப்பா ஊருக்குப் போகாமலிருந்தாலே பரவாயில்லை போலிருக்கிறதே! லீவ் போட்டதெல்லாம் இதற்குத்தானா?' என்று இடி இடி என்று சிரிப்பாளாம் மஞ்சுளா. 'மஞ்சுளா, உண்மையாகச் சொல்கிறேன். இனி அம்மா அப்பா, வந்தபிறகு அவர்களுடன் என்னால் இந்த வீட்டில் ஒரு நிமிஷம்கூட இருக்கமுடியாதுபோலிருக்கிறதே!' என்று சொல்லுமாம் அந்தப் பிள்ளை. 'சரோஜா! வாஸ்தவமாகச் சொல்கிறேன். 'அவர்' (கணவர்) எடுப்பார் கைக்குழந்தையடி. கள்ளம் கபடம் ஒன்றும் தெரியாது. அந்த ஸங்கோஜம் மாத்திரம் ஒன்று இல்லாமலிருந்தால் என்னைவிட இந்த உலகத்தில் பாக்யசாலிகள் யார் இருப்பார்கள் என்று நினைக்கிறாய்? இப்பொழுதும் விஷயம் என்ன தெரியுமோ? மாமியாரும் மாமனாரும் திடீரென்று எங்காவது ஊருக்குப் போயிருப்பார்கள். அவ்வளவுதான். தந்திபோல் கடிதம் எழுதிவிட்டார்.' என்றாள் மஞ்சுளா' என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், 'பானு! உன்னை அப்பா கூப்பிடுகிறார்' என்று பானுவின் சகோதரன் வந்து கூப்பிட்டான். 'சரி! நான் வருகிறேனடியம்மா. எல்லோருக்கும் போய் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் பானு.

நாமொன்று நினைக்க......!

ய. மகாலிங்க சாஸ்திரி எம். ஏ. பி. எல்.

சர்மாவுக்கு ஹோட்டலிலிருந்து இரவு சாப்பாடு வந்துவிட்டது. ஆனால் சர்மா தன் ரூமை விட்டு எழுந்திருக்கவில்லை. முத்துஸ்வாமி வந்து ஸந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு, இலையைப்போட்டுச் சாப்பாட்டை இருவருக்கும் பிரித்துவைத்து விட்டுக் கூப்பிடும்வரை பாமா போன தாது விஷயம் என்னவாயிற்று என்று அறியக்காத்திருப்பதாய் சர்மா ஸங்கல்ப்பித்துக்கொண்டான். அன்று முத்துஸ்வாமி வெகுநேரமாகியும் வரவில்லை. காரணம் நாம் முன்னமேயே அறிந்ததுதான். "வெந்த உள்ளத்தின்" கவிதையை செல்லத்தினிடமிருந்து திருப்பிப்பெற அவன் முதலில் அவளை ஸ்கூலில் சந்தித்துவிட்டுப்பிற்பாடு அவள் வீட்டிற்குச் சென்றானல்லவா?

சர்மா முத்துஸ்வாமி வரவேண்டியதற்காக வாசல் கதவைத் தாளிடாமல் விட்டிருந்தான். "ஒருவேளை கமலியே வருவதானாலும்......"

தடதடவென்று வீட்டிற்குள் யாரோ சிலபேர்கள் நுழைவது சர்மா காதில் விழுந்தது.

சர்மா எழுந்து பார்க்குமுன் உள்ளே நுழைந்த மனிதர்கள் வாசல் கதவை உள்புறம் தாளிட்டுக்கொண்டார்கள். சர்மா, கழியும், கயிறும் சாட்டையும், டார்ச்சு லைட்டும் வைத்துக்கொண்டிருந்த நன்கு தடி ஆட்களை ரேழியில் பார்த்தான் உடல் நடுக்கமுற்றான். நாக்குக் குழற, "யார்?" என்று அவன் கேட்குமுன் லைட்டுக்கள் அணைக்கப்பட்டன. வேண்டும்போது டார்ச்சுலைட் ஒளிவீசியது. இரண்டு ஆட்கள் சர்மாவைக் கட்டிப்பிடித்து வாயில் துணியை அடைத்துக் கூடத்திற்கு இழுத்துவந்தார்கள். அங்கு அவன் ஒரு பெஞ்சியின் பேரில் குப்புறப்படுக்க வைக்கப்பட்டான் அவனை அந்தப் பெஞ்சியுடன் தலைப்பக்கத்திலும் கால்பக்கத்திலும் இறுக்கிக்கட்ட அவன் மேல்துண்டும் அரைத்துணியுமே உபயோகப்படுத்தப்பட்டன. இருவர் அவன் தலையையும் கால்களையும் அமுக்கிப் பிடித்துக்கொண்டார்கள். மற்ற இருவர் அவன் இரு பக்கங்களிலும் கையில் சாட்டையுடன் நின்றுகொண்டார்கள் மற்ற இருவர் அவன் இரு பக்கங்களிலும் கையில் சாட்டையுடன் நின்றுகொண்டார்கள்.

"எஜமான் சொன்னபடி எண்ணிக்கொள்" என்றான் சாட்டை வைத்துக்கொண்டிருந்த ஒருவன்.

"சரி. ஆரம்பி! நேரமாகிறது" என்றான் தலைப்பக்கம் அமுக்கிக் கொண்டிருந்தவன். உடனே சாட்டைக்காரர்கள் இருவரும், "வெந்த உள்ளம்" "வேகாத உள்ளம்" என்று முறை வைத்துக்கொண்டு மாறி மாறி சர்மாவின் முதுகில் சவுக்கடி கொடுத்தார்கள். தலைப்புறம், கால்புறம், இருந்தவர்கள் எண்ணிக்கையை வாய்விட்டுச் சொல்லிவந்தார்கள். இரட்டையால் முப்பத்திரண்டு ஆனதும், "வரிக்கு இரண்டடி கணக்கு சரியாய் போய்விட்டது நிறுத்து" என்றான் தலைப்பக்கமிருந்தவன்.

"வெந்துதோ. வேகவில்லையோ, புரட்டிப்பார்ப்போமா?" என்றான் கால்பக்கமிருந்தவன்.

"அது சாவதற்கு ஒன்றும் ஆகவில்லை. ஒருவேளை மூர்ச்சை அடைந்திருக்கலாம்" என்றான் தலைப்பக்கம் நின்றவன்.

"இது கறுங்கல். அடித்தவன் கைதான் நோகும் மூர்ச்சையுமில்லை, ஒன்றுமில்லை. பயத்திலே ஒண்டிக்கிடக்கு" என்றான் கால்பக்கம் நின்றவன்.

"நம்ம வேலை முடிந்தது. அது செத்தால் என்ன: சாகாவிட்டால் என்ன? அப்படியே போட்டுவிட்டு வாங்கோடா! நாம் கொல்லை வழியாய் ஓடிப்போய் விடுவோம். இங்கு தாமதித்தால் நமக்குத்தான் ஆபத்து." என்றான் ஒரு சாட்டைக்காரன். எல்லோரும் புறப்பட ஆயத்தமானபோது "இதோ பார்! என் அடிகள் தோலை மட்டும் புரட்டியிருக்கின்றன. அடே! பாவி! உன் அடிகள் ரத்தம் ஒழுகச் செய்திருக்கின்றனவே!" என்றான் மற்றொரு சாட்டைக்காரன் டார்ச்சைப்போட்டுக் காண்பித்துக்கொண்டு.

"ரத்தக் கொழுப்புத்தானே இவரை இந்தப்பாடு படுத்தி வைத்தது. இனி ஒழுங்காய் போய்விடுவார்" என்றான் கால் பிடித்த காதகன்.

அதற்குள், "வாடா, வாங்கோடா!" என்று ஒருவரை ஒருவர் பிடித்து இழுத்துக்கொண்டும், அவரவர் சாமான்களைக் கையில் எடுத்துக்கொண்டும் அங்கு நால்வரும் கொல்லைக்கதவைத்திறந்து கொண்டு வெளியேறினார்கள்.

சர்மாவுக்கு சரீரத்தை அசைக்க முடியாவிட்டாலும், வாய் பேச முடியாவிட்டாலும் சிந்தனைகள் வெகு நேரம் வரை ஓடிக்கொண்டிருந்தன. முதலில் திருடர்கள் வந்ததாய்தான் அவன் நினைத்தான். பிற்பாடு பாமா

தூது சென்றது இந்த விபரீதத்தில் முடிந்ததென்று புரிந்துகொண்டான். "ஐயர் எவ்வளவு கொடூரசித்தமுடையவர்! என் சரீரத்தை வதைப்பதால் அவர் அருமைக்கமலியின் உள்ளத்தை உரித்து உப்பைத் தடவுகிறார் என்பதை அவர் அறியாதவர். உடைந்துபோன அவர் பெண்ணின் வாழ்க்கைக் கப்பலை ஒன்று சேர்த்துப் பிரயாணத்தில் ஈடுபடுத்துவதற்குத் தன்னைத் தியாகம் செய்துகொள்ளும் உத்தம உபகாரி நான் என்பதை அந்த மூடாத்மா நினைக்கவில்லை. ஆனால் இரண்டு வெந்த உள்ளங்கள் ஒட்டாதபடி இவர் எவ்வளவுநாள் பாதுகாக்கப் போகிறார் பார்ப்போம்" என்று அவர் பெண்ணைக் கடத்திக்கொண்டு போவதன் மூலம் அவரைப் பழிக்குப் பழி வாங்கும் சங்கல்பத்தை திடப்படுத்திக் கொண்டான். தான் கமலியை அடைய மேற்கொண்ட விரதத்திற்கு இந்தச்சாட்டையடி ஒரு பயங்கரப் பரீட்சை கட்டம் என்றே அவன் கருதினான். இந்த நினைவுகளோடு சரீரம் துன்புறுவது மூலம் வேதனையும் கலந்து கொண்டது, அடிபொறுக்க மாட்டாமல் அவன் உள்ளம் வெடித்தான். கண்களால் நீர் வடித்தான். படம் விரித்த பாம்புபோல் மூச்சுவிட்டான். வலியும், எரிச்சலும், கடுப்பும், விறுவிறுப்பும் அவனுக்கு ஒவ்வொரு மயிர்க்காம்பிற்கு ஒரு தேள் கொட்டினதுபோலும், நெருப்பை அள்ளி முதுகில் போட்டதுபோலும், புண்ணில் ஊசிகளால் குத்தினதுபோலும், சதையைப் பிய்த்து இழுப்பதுபோலும், அடிக்கு அடி தீவிரமாகி வந்தன. ஆனால் இறுதியாக, மூர்ச்சைக் காரிருளில் எல்லாவேதனைகளும் இரண்டறக்கலந்து மறைந்தன. காலம் தேசம் வர்த்தமானம் எல்லாம் கடலில் கிடக்கும் மலைகளைப் போல் அந்த மயக்கத்தில் மூழ்கிவிட்டன.

சர்மா இங்கிலையிலிருக்கும்போது முத்துஸ்வாமி வீடு திரும்பி வந்து கதவைப் பலதடவை தட்டிப் பார்த்தான். உள்ளே இருந்து பதில் வராததால் அவன் பலவிதமாய் காரணங்களை கற்பனைசெய்துகொண்டு மனம் வெறுத்துப்போய் திண்ணையிலேயே பட்டினியாய்ப் படுத்துக் கொஞ்ச நேரத்தில் அயர்ந்து நித்திரைபோனான்.

தடிகொண்டு அடித்துநொறுக்கி வீழ்த்தப்பட்டாலும் கழுதை விரைவில் வலியை உதறிவிட்டு எழுந்திருந்து மேயக் கிளம்பிவிடும் என்று பஞ்சதந்திரம் சொல்லுகிறது. மனிதர்களிலும் அத்தகையோர் உண்டு. சர்மா நடு நிசிக்கு மேல் பிரக்ஞை திரும்பி மெல்லத் தன் கைகளைக் கட்டினின்று விடுவித்துக்கொண்டு பிறகு மற்ற பந்தங்களையும் அகற்றிவிட்டுச் சுதந்திரம் பெற்று எழுந்தான். தன் உடல் நிலைமையை முதலில் ஆராய்ந்து அறிந்தான். ரத்தம் கசிந்த துணிகளை அகற்றிவிட்டு உடையை மாற்றிக்கொண்டான். உடம்பு எரிச்சலும் காங்கையும் அதிகமாயிருந்தபடியால் தனக்குத் தானே அவசர சிகித்சை செய்துகொண்டு சாப்பாட்டுப் பாத்திரங்களைப் பிரித்துச் சிறிது அன்னமருந்தினான். சிறிதுநேரம் மேஜையின்மீது சாய்ந்து வலியாற்றிக்கொண்டு மேல் நடவடிக்கைகளைப் பற்றிச் சிந்திக்கலானான்.

பொழுது விடியுமுன் அந்த வீட்டைவிட்டு வெளியேறுவது என்பது அவன் செய்த முதல் தீர்மானம்.

ஹாஸ்டலில் ட்யூடோரியல் ஸிஸ்டம் அமுலுக்கிருந்ததால் தான் ஒரு ட்யூடர் ஆகச் சேர்ந்து ஹாஸ்டலில் அதற்கேற்பட்ட ரூமிலேயே இருந்து விடுவது என்பது இரண்டாவது தீர்மானம்.

மூன்றாவது தீர்மானம், கமலியைக் கைப்பற்றுவதின் மூலம் சூர்யநாராயண அய்யர் மீது பழி வாங்குவது என்பது—சர்மா போலீஸ் கம்ப்ளெயிண்டு கொடுக்க விரும்பவில்லை.

விடியுமுன் சர்மா தன்னால் இயன்றவரை பார்ப்பவர்கள் சந்தேகிக்காதபடி "டிரஸ்" பண்ணிக்கொண்டு, வீட்டைவிட்டு வெளிக் கிளம்பித் தனக்கு நண்பரான ஒரு டாக்டரிடம் சென்று தாத்காலிகமாய் சிகித்ஸை பெற்றுக்கொண்டு ஹோட்டலில்இட்லிகாபிசாப்பிட்டுவிட்டு காலேஜ் பிரின்ஸிபலிடம் சென்று தன்னை ட்யூடர் ஜாப்தாவில் சேர்த்து ஹாஸ்டலில் ரூம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். அது அனுமதிக்கப்பட்டதும் ஹாஸ்டலில் தன் வாஸத்தை ஸ்தாபித்துக்கொண்டு ஹாஸ்டல் பியூனை அனுப்பி முத்துஸ்வாமிக்கு வீட்டைக் காலிசெய்து விடும்படிக்கும் தன் சாமான்களை ஹாஸ்டலுக்கு அனுப்பி விடும்படிக்கும் எழுத்து மூலம் அறிவித்தான். முத்துஸ்வாமி, திடீரென்று இந்த மாறுதல் ஏற்பட்டதற்கு ஒருவாறு காரணத்தை ஊகித்து அறிந்துகொண்டு, சர்மாவின் சாமான்களை அன்று சாயந்திரம் வண்டிவைத்து ஹாஸ்டலில் சேர்ப்பித்துவிட்டுத் தன் நிலைமையைப்பற்றி சர்மாவிடம் ஆலோசனை கேட்டான், சர்மா இரண்டொரு தினங்கள் அவன் தன்னுடன் ஹாஸ்டலில் சாப்பிடலாமென்றும், அதற்குள் வேறு வசதி அவன் செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினான். முத்துஸ்வாமி அதற்கு இஷ்டப்படாமல் படிப்பை நிறுத்திக்கொள்வதென்று தீர்மானித்து ஹெட்

"நம்ம நாடகத்திலே உங்களை இழுத்து போட்டுடணும்னு உத்தேசம் பண்ணியிருக்கேன்......"

"சேச்சே! எனக்கும் நாடக மேடைக்கும் ரொம்பதூரம். இந்த 'ஆக்ட்' பண்ற வம்பு தண்ட்டால்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம்......"

"அதுல்லே சார். 'நாடகம்'னு ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போறேன். அதுக்கு உங்களை உதவி ஆசிரியரா எடுத்துக்கலாம் என்று தீர்மானிச்சிருக்கேன்."

மாஸ்டரிடம்போய் அது விஷயமாய் தெரிவித்துக்கொண்டான்.

ஹெட்மாஸ்டர் பெரிய ஸம்ஸாரி. கஷ்ட நிஷ்டுரங்களை அறிந்தவர். "என்னடா! பைத்தியக்காரா! பரீட்சை சமீபிக்கும்போது ஊருக்குப் போகவேண்டுமென்கிறாய்! போன வருஷம் ஒன்று வீணாய்போனது போதாதா! நீ சாப்பாட்டைப்பற்றிக் கவலைப் படாதே! என் வீட்டில் இருந்து இந்த இரண்டு மூன்று மாதங்களைக் கழித்துவிடு. பிற்பாடு காலேஜ்படிப்பு பிராப்தமிருந்தால் நடக்கிறது'' என்று அவர் அவனுக்கு மிக்க அன்புடன் அபயமளித்தார். அன்று முதல் முத்துஸ்வாமி ஹெட்மாஸ்டர் வீட்டில் குருகுல வாஸம் செய்யலானான். ஹெட்மாஸ்டர் அவனை வெகு பிரியத்துடன் வரவேற்றதற்கு ஒரு அந்தரங்க காரணமுமுண்டு. ஹெட்மாஸ்டருக்குப் பெண்கள் ஐந்து. அவர் தம்பி பெண்கள் இரண்டும், மைத்துனிகள் இரண்டும் அவர் வீட்டில் இருந்துகொண்டு பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். இந்த நவ கன்னிகைகளும் பன்னிரண்டு முதல் பதினெட்டுக்கு உட்பட்ட வயதுள்ளவர்கள். ஹெட்மாஸ்டர் வெகுநாளாய் முத்துஸ்வாமியைக் குறிவைத்திருந்தார். அவனுக்கு மேல்படிப்பிற்கு ஒத்தாசை இருந்தால் அவன் எம். ஏ மட்டுமல்லாமல் ஐ.ஸி.எஸ் பரீட்சையில் கூட அனாயாசமாய் தேறக் கூடியவன் என்பது அவர் நம்பிக்கை.

முத்துஸ்வாமி ஹெட்மாஸ்டர் வீட்டில் வசிக்கப் புகுந்த சில நாட்களுக்குள்ளேயே பள்ளிக்கூட மாணவிகளிடையே விளையாட்டு நேரங்களில் அவன் ஹெட்மாஸ்டருக்கு மாப்பிள்ளையாகப் போகிறான் என்ற பிரஸ்தாபம் தலைகிளம்பியது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த செல்லம் ஒருநாள் பந்து விளையாடும் மைதானத்தில் மூர்ச்சையடைந்து, காந்திமதியால் உபசரிக்கப்பட்டு வீடு கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். செல்லத்தின் துயரம் ராமநாதனின் உதாசினத்தினால் ஏற்பட்டதென்று சிவராமன் நினைத்து அவனுக்குச் சமாதானம் சொன்னதும், காந்திமதி அதை மறுத்து உண்மையை விளக்கப் போகும் சமயத்தில் அதற்கு இடம் கொடாமல் வேறு விருத்தாந்தம் குறுக்கிட்டதும் முன்னமேயே வருணிக்கப்பட்டிருக்கிறது.



முத்துஸ்வாமி ஒருவாரம் முன் செல்லத்தினிடம் "வெந்த உள்ளத்தின்'' கடிதத்தை வாங்கிக் கொள்வதற்காக ஐயர் பங்களாவுக்கு வந்தபோது காவல்காரன், "ஓடிவிடுங்க, ஐயா! இங்கே இப்போ வந்தா உமக்கு ஆபத்துத்தான்'' என்று எச்சரிக்கை செய்து விரட்டியதுமுதல் உள்ளூற மிக்க பயந்துபோனான். "அந்தக் குடியைக் கெடுக்கும் கடிதம் யார் கையில் சிக்கியதோ? அதற்கு என்ன அர்த்தம் செய்துகொண்டார்களோ? அதை எழுதியவன் என்று என்னை நினைத்தால் அவர்கள் எனக்கு என்ன தண்டனை விதிக்க நினைப்பார்களோ?

துர்ஜன ஸஹவாஸம் தலைக்கு வந்துவிட்டதே! நான் ஏன் அக்கடிதத்தைக் கையில் எடுத்தேன்! ஏன் அதைப்படிக்க ஆவல் கொண்டேன்! 'விநாசகாலே விபரீத புத்தி'! என்பது சரியாகப் போய்விட்டதே! துஷ்ட சகவாஸமும் புத்தி சபலமும் எனக்குச் சம்பந்தமில்லாத குற்றத்தை என்பேரில் சுமத்தி என்னைச் சந்தியில் நிறுத்த மூல காரணமாகிவிட்டனவே! இப்படி நான் கடிதம் எழுதினதாய் என்னைப்பற்றிப் பேச்சு வெளியாகுமானால், அந்த அவமானத்தை நான் எப்படித் தாங்குவது! ஹெட்மாஸ்டர் வீட்டில் பல பெண்களுக்குமத்தியில் இருக்கும்என்னை அவர் அவநம்பிக்கையால் உடனே வெளியேற்றிவிடுவாரே! தஸ்தவேஜி எனக்கு விரோதமாயிருக்கும்போது நான் ஒரு பாபசிந்தனையும் அற்றவன் என்று யாரிடம் முறையிடுகிறது! எனக்குப் போருதகாலம் வலுவாய்ச் சூழ்ன்று வருகிறது. இதை மானமிழக்காமல் கடந்து விட்டால் போதும். இந்தப்படிப்பு எனக்கு வேண்டாம். சோற்றிற்கு நான் ஒருவரை அண்டி நிற்கவேண்டாம். அஸத்துக்களும், அனாசாரமும் நிரம்பிய இந்தப் பட்டண வாஸம் எனக்கு வேண்டாம். ஊரில் பத்துமா நிலமும் ஒரு வீடும் இருக்கிறது. எனக்கும் அம்மாவுக்கும் அது காலக்ஷேபத்திற்குப் போதும். என் தகப்பனாருடைய வழியில்

நான் கொஞ்சம் யோக்யதையை
விருத்தி செய்துகொண்டால் எவ்
வளவோ கௌரவமாகவும், பரி
சுத்தமாகவும் வாழலாம். ஏன்
எனக்கு இந்தப்பிடை பிடித்த
ஆங்கிலப் படிப்பு! இதை
வேண்டாமென்று முதலில் ஒதுக்கி
அத்யயனம் செய்ய என் தகப்
பனர் என்னை நியமித்தார். மறு
படி ஏதோ யோசனைசெய்து அத்ய
யனம் பூர்த்தியாகுமுன் என்னை
ஆங்கிலம் கற்கப் பள்ளிக்கு அனுப்
பினர். இப்படிப்பில் பல கட்டங்
களில் பல இடையூறுகள் வந்து
அவ்வப்போது இதை ஸமாப்தி
செய்துவிடுவதென்று நான் தீர்மா
னித்தும் இது என்னை நைச்சியம்
பண்ணி மறுபடி மறுபடி தன்
னிடமே இழுத்துக்கொண்டது.
ஆனல் இனி இந்தச் சபலத்திற்கு
இடம் கொடுக்கமாட்டேன். கயிறு
கழுத்துக்கு வந்துவிட்டது.
சுளுக்கு இறுகும்முன் தப்பிப்
பிழைக்கவேண்டும். இந்தக் கடி
தம் என்னை தூர்த்தனென்று
பறையறைவிக்கப் போகிறது.
நான் அதை எழுதவில்லை என்று
எவ்வளவு பேர்களிடம் மன்ருட
வேண்டுமோ! எவ்வளவு சபதங்
கள் செய்ய வேண்டி வருமோ!
எவ்வளவு சாட்சியங்கள்
சேகரிக்க வேண்டுமோ! ஆனல்,
என்னைச் சந்தேகித்தால் செல்
லம் ஒருத்திதானே சந்தேகிக்
கலாம்!—ஆம், காந்திமதியும் செல்
லமும்தான்!— காந்திமதி வேறு,
செல்லம் வேறு அல்லவே! இவர்
களுக்கு என் பெயரை வெளியிடும்
உத்தேசமிருந்தால் அன்று பங்
களா வாசலில் என்னைக் காவல்
காரன்மூலம் எச்சரிக்கை செய்து
காந்திமதி அனுப்பியிருப்பாளா?
நான் போன சமயம் அந்தப்
பாழாய்ப்போன கடிதம் வீட்டில்
பெரியவர்கள் கையில் சிக்கிக்
கொண்டுவிட்டதென்று ஊகிக்கி
றேன். அதன் நிமித்தமாய் செல்
லம் ஏதாவது கண்டனம் தண்
டனைகளுக்கு உள்ளானளோ, என்
னமோ? என்று நான் சந்தேகிக்
கிறேன். இல்லாவிட்டால் காந்தி
மதி என்னைக் கண்டவுடன் அவ்
வளவு பரபரப்புடன் ஓடிவரக்
காரணமென்ன? இதனல் அவ்விரு
பெண்களும் என் பெயரைக்
காண்பித்துக் கொடுக்கும்
எண்ணம் உள்ளவர்களாய்
தெரியவில்லை. இதிலிருந்து
இந்த அநாமதேயக் கடிதம்
அமைதியான குடும்பத்தில் ஏதோ

குழப்பங்களை உண்டுபண்ணியிருக்
கிறதென்று நான் நினைக்கிறேன்.
இவை முற்றி என்ன ஸ்வரூபத்
துடன் வெளிக்கிளம்பப் போகின்
றன என்பது போகப் போகத்
தான் தெரியவேணும்.—''

இவ்விதம் நாளுக்கு நாள் சிந்
தனைகளைப் பெருக்கி மனம்
கலங்கி, உடல் மெலிந்து
கவலை கொண்டிருந்த முத்து
ஸ்வாமிக்குச் செல்லத்தின் தகப்
பனர் ஹெட்மாஸ்டரைப் பார்க்க
வந்ததும் தன் விசாரணைக்காலம்
நெருங்கிவிட்டதென்று மனதில்
பீதி குடிபுகுந்தது. ஹெட்மாஸ்
டரிடம் அக்கடிதம் பரிசீலனைக்கு
வருமென்றும், அவர் எழுதின
வனைக்கண்டுபிடிக்கும்படி ஏவப்
படுவாரென்றும் விசாரணை
தொடங்கினல் லைப்ரரி ரிஜிஸ்டர்
பதிவின்மூலம் அக்கடிதம் வைக்
கப்பட்டிருந்த புஸ்தகம் செல்லம்
வாங்கிக்கொள்ளும்முன் என்
னிடம் இருந்ததென்று சுலப
மாய்க் கண்டுபிடிக்கப்படலா
மென்றும், அப்போது பிரதிவாதி
நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கைகள்
தீவிரப்படுத்தப் படுமென்றும்
முத்துஸ்வாமி யோசிக்கலானன்.
"அந்த கட்டம்வரையில் ஹெட்
மாஸ்டர் வீட்டிலேயே சாப்பிட்
டுக்கொண்டிருக்கும் நான் உண்
மையை உரைக்காமலிருந்தால்
அதுவே என்மீது குற்றச்சாட்
டிற்கு ஆதாரமாகும். ஆகையால்
விசாரணை துவக்குமுன் நானே
ஹெட்மாஸ்டரிடம் உள்ளதை
உள்ளபடி வாக்குமூலம்கொடுத்து
விடுகிறேன். பிற்பாடு எது நடந்
தாலும் சம்மதம்.'' என்று முத்
துஸ்வாமி தனக்குள் தீர்மானித்
துக்கொண்டு மனதை திடப்படுத்
திக்கொண்டான்.

அவ்விதம் நிருபணம் செய்ய
மறுநாள் ஹெட்மாஸ்டர் பங்க
ளாவிற்குப்போய்வருவதை எதிர்
பார்த்துக்கொண்டிருந்தான்.

(தொடரும்.)



அன்பின் அதிசயம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

ஒரு ராஜா தங்கச் சிங்காசனத்தில் வீற்றிருந்தார். சிங்காசனத்தின்மேல் ஓர் அழகிய பட்டுக் குடை கவிந்திருந்தது. அந்தக் குடை முத்துக்களால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. இரண்டு பக்கங்களிலும் இருவர் நின்றுகொண்டு வெண்சாமரை வீசிக்கொண்டிருந்தார்கள். பழைய ராஜாக்கள் இப்படித்தான் கொலுவிருப்பார்கள்.

அந்தக் கொலு மண்டபத்திலே பிரபுக்களும், பெரிய பெரிய அதிகாரிகளும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். அரசரும் சபையினரும் சிறந்த ஆடையாபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கு எதிரே பெரிய நிலைக்கண்ணாடிகள் வைக்கப்பெற்றிருந்தன. அந்தக் கண்ணாடிகளில் ராஜாவும் மற்றவர்களும் முகமும் உருவமும் பார்க்கலாம். ஆனால் தங்கள் முகமோ, உருவமோ தெரியாது. வேறு முகங்கள் உருவங்கள் தோன்றும். எந்த உருவங்கள்? அரண்மனைக்கு அப்பால் வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் பாடுபடுகிறவர்களின் முகங்கள், உருவங்கள் அந்தக் கண்ணாடிகளில் தெளிவாய்த் தோன்றும். தூரத்திலுள்ள அந்த ஜனங்கள் இந்தக்கொலு மண்டபத்தில் உள்ளவர்களைப் போல் ஆடையாபரணங்கள் அணிந்து ஆனந்தமாய் இருக்க மாட்டார்கள் அல்லவா? அவர்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த வேர்வையோடு கூடிய நெற்றிகளும், வருந்தி உழைக்கும் முகங்களும், கந்தை கட்டிய உருவங்களும் இந்தக் கண்ணாடிகளில் தோன்றும். ஆனால் அந்த ஏழை மக்களின் சுக துக்கங்களோடு கூடிய முகங்களை இந்தப் பிரபுக்களும், பெரிய அதிகாரிகளும் பார்க்க ஆசைப்படமாட்டார்கள். அரசர் மட்டும் இடையிடையே அக்கண்ணாடிகளில் நோக்குவார்.

அந்தக்கண்ணாடிகள் சாதாரண நிலைக்கண்ணாடிகள் அல்ல. அவை மந்திரக் கண்ணாடிகள். ஒரு நல்ல மந்திரவாதி அக்கண்ணாடிகளை அரசருக்குக் காணிக்கையாக அளித்திருந்தார். அந்தக் கண்ணாடிகள் கிடைத்ததில் அரசருக்குச் சந்தோஷம்தான். ஆனால் பிரபுக்களும், அதிகாரிகளும், 'நாமும் அரசரும் சந்தோஷமாய்க் கொலுவிருக்கும்போது, ஏன் இந்தப்பீடை பிடித்த முகங்களைப் பார்க்க வேணும்' என்று நினைத்தார்கள். அரசரோ அந்த முகங்களைப் பார்த்து நாட்டின் நிலைமையை உள்ளபடி தெரிந்துகொள்வார். ஏழைகளுடைய கஷ்டங்களைப் போக்க வழி தேடுவார். அதற்காக அரசர் போடும் உத்தரவுகளுக்குமட்டும் அதிகாரிகளும், பிரபுக்களும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

ஒரு நாள் தமக்கு எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் அரசர் ஓர் உருவத்தைப் பார்த்தார். அந்த முகம் தெரியவில்லை. அவன் குனிந்து குனிந்து ஏதோ பொறுக்கிக் கொண்டிருந்தான். அப்போது சபையிலிருந்த ஒரு பிரபு எழுந்து நின்று ராஜாவைப் புகழ்ந்துகொண்டிருந்தான். ஆனால் அந்த வார்த்தையொன்றும் அரசர் காதில் விழவில்லை. 'குனிந்து குனிந்து அந்த மனிதன் என்ன பொறுக்குகிறான்?' என்பதை ராஜா கவனித்துப்

பார்த்தார். அவன் விறகுச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான்.

"ஐயோ பாவம்! சமையல்செய்ய அவன் வீட்டில் விறகு இல்லை போல் இருக்கிறது!" என்று அரசர் எண்ணினார். பெரிய அதிகாரிகள் பெரிய பெரிய ராஜ்ய காரியங்களைக் குறித்துப் பேசினார்கள். நீண்டநேரம் பேசினார்கள். இடையிடையே ராஜா நிலைக்கண்ணாடியில் சுள்ளி பொறுக்குகிறவனையும் கவனித்தவண்ணமாய் இருந்தார். கடைசியாக அந்த முகத்தைப் பார்த்ததும், 'அவன் இத்தனை நாழிகை பட்டினியாக இருக்கிறானே!' என்று எண்ணினார்.

ஒரு பெரிய அதிகாரி அரண்மனையில் வேறொரு ராஜாவுக்கு நடத்தவேண்டிய விசேஷ விருந்தைக் குறித்துப் பேசினான். பேசிவிட்டு, 'மகாராஜாவின் உத்தரவு எப்படியோ?' என்று பிரார்த்தித்தான். அப்போது மறுபடியும் அரசர் அந்தச் சுள்ளி பொறுக்குகிறவனின் முகத்தைப் பார்த்து விட்டார். உடனே அதிகாரியை நோக்கி, 'அரண்மனைச் சமையல்காரர்களிடமிருந்து ஒரு சாப்பாடு வாங்கிக்கொண்டுவா' என்று கட்டளையிட்டார்.

அதிகாரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. எனினும் உத்தரவுப்படி அதிகாரி சாப்பாடு வாங்கி வந்தான். அப்போதும் நிலைக்கண்ணாடியில் சுள்ளி



பொறுக்குகிறவனை அரசர் கவனித்துப் பார்த்தார். 'எங்கே பொறுக்குகிறான்?' என்று கவனித்தார். ஒரு குன்றின் அடிவாரமும், அங்கே சில மரங்களும் தெரிந்தன.

அரசர் அந்தக் குன்றை நோக்கிப் புறப்பட்டார். அவசரத்தில் செருப்புக்கூடப் போட்டுக் கொள்ள வில்லை. அதிகாரியும் சாப்பாட்டுப் பாத்திரத்துடன் அரசரைத் தொடர்ந்தான். அரசர் காலில் செருப்பு இல்லாததால் அந்த அதிகாரி தானும் பாதரட்சை போட்டுக் கொள்ளவில்லை.



'அரசர் எங்கேபோகிறார்?' என்பது அதிகாரிக்குவிளங்கவில்லை. கேட்பதோ மரியாதைக் குறைவு. அரசரும் பேசவில்லை. ஆகவே அதிகாரியும் மௌனமாய்ப் பின் தொடர்ந்தான். அவர்கள் காட்டு வழியிலே நடந்தார்கள். வழியெல்லாம் கல்லும் முள்ளும் தான். அன்று வெயில் தாங்க முடியாமல் வீசியது. அவர்களுடைய கால்களில் கல் குத்தியது, முள் தைத்தது.

ராஜா 'விடுவிடு' என்று வேகமாய் நடந்தார். அதிகாரியும் மூச்சுத்திணற நடந்தான். கால்கள் வெதும்பிச் சிவந்து போயின. அதிகாரியால் நடக்க முடியவில்லை. கால்களில் இரத்தம் வந்துவிட்டது. ராஜாவோ காலைப்பற்றிய கவலையே இல்லாமல் நடந்தவண்ணமாய் இருந்தார். இவருக்குத் தம்முடையகஷ்டம் தெரியவில்லை. 'அந்த ஏழைக்குப் பசிக்குமே' என்று அந்தக்கஷ்டத்தைத் தான் நினைத்துக்கொண்டிருந்தார்.

அதிகாரி நடக்கமுடியாமல் பெரு மூச்சு விட்டுக் கொண்டே முன்னே போய்க் கொண்டிருந்த ராஜாவைப் பரிதாபமாகப் பார்த்தான். மகாராஜாவுக்குக் கால் வலிக்கவில்லையா? ஏன்?என்று கவனித்து பார்த்தான். என்ன அதிசயம்! ராஜா கல்லையும், முள்ளையும் மிதித்துச் செல்லவில்லை. மலர்களின் மேல் அல்லவா

அடி வைத்துப் போகிறீர்? அப்படி யார் இந்தப் பாதையில் மலர்களைப் பரப்பி வைத்தது? ஆனால் அதிகாரி கால் வைத்ததும் பூவும் இல்லை, இலையும் இல்லை, கல்லும் முள்ளும்தான்!

மகாராஜா! மன்னியுங்கள். இந்த வெயிலில் இந்தக்கல்லிலும் முள்ளிலும் இனி என்னால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லையே! என்ன செய்வேன்?' என்று அதிகாரி கதறினன்.

ராஜா அதிகாரியைத் திரும்பிப்பார்த்து, பாவம் அந்தக் கிழவன் பட்டினியோடு விறகு பொறுக்கிக் கொண்டிருக்கிறன். அந்த நினைப்புடன் அந்த இரக்கத்துடன் என்னைத் தொடர்ந்து வா. இதோ பார்' நான் அடி வைத்து நடக்கும் இடம் சூடு இல்லாமல் குளிர்ந்திருக்கிறது. என் அடிச்சுவடுகளில் நீயும் நடந்துவா, சுடவே சுடாது. பார், கிழவன் பட்டினியாயிருக்கிறனே! என்று சொன்னர்.

இப்போது அதிகாரிக்கும் கிழவன் மேல் இரக்கம் வந்துவிட்டது. ஈர நெஞ்சோடு அரசர் அடிச்சுவடுகளில் நடந்தான். ராஜாவுக்காகப் பரப்பியிருந்த ரோஜா மலர்களின் மேல் அதிகாரியும் நடந்து போனன். நடக்கும்போதே, 'என்ன அதிசயம், மகாராஜா!' என்று அதிகாரி கேட்டான். அரசர் பதில் சொல்லவில்லை. அவர் மௌனமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கேள்வி காதில் விழவில்லை. அரசர் கிழவனையே நினைத்துக் கொண்டிருந்தார். அவருடைய எண்ணமெல்லாம் கிழவனைப்பற்றியிருந்தால் அதிகாரியின் கேள்வி எப்படி காதில் விழுந்திருக்கும்?

இருவரும் குன்றின் அடிவாரத்திலே விறகு பொறுக்கிக்கொண்டிருந்த கிழவனைக் கண்டார்கள். அரசர் தம் கையால் அந்த ஏழைக் கிழவனுக்குச் சோறு பரிமாறினர். கிழவன் ராஜாவை அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டே வயிறு நிறையச் சாப்பிட்டான்.

கிழவனுக்குப் பசி தீர்ந்த மகிழ்ச்சி. அரசருக்கும், அதிகாரிக்கும் பசி தீர்த்த மகிழ்ச்சி,

அரசரும், அதிகாரியும் அரண்மனைக்குத் திரும்பினர்கள். அந்த மகிழ்ச்சியிலும் அன்பிலும் இருவருக்கும் நடந்த களைப்பு தெரியவில்லை. 'எல்லாம் அன்பின் அதிசயம்தான்!' என்று அதிகாரியும் உணர்ந்து கொண்டான்.

கிறிஸ்துமஸ் நாள்

விந்தியா

மாடியில் உலாவிக்கொண்டிருந்த கணவர் தடதடவென்று மாடியிறங்கி வந்து குடுகுடுவென்று வாசலுக்கு ஓடுவதை ஒரு நிமிஷம் நின்று கவனித்தாள் லக்ஷ்மி. வாசற்படிகளில் இறங்கி விட்டார்—யாருடன் பேசுகிறார்?

சொந்த நன்மைக்காகவே ஏற்பட்ட பிரார்த்தனையும், பக்தியும், தெய்வத்தையும் திருப்தி செய்வது போல, இப்போது தானாக வந்த ரமணியின் ஓட்டமும் செய்தியும், லக்ஷ்மிக்குத் திருப்தி யளித்து விட்டன.

"அப்பா 'பாதரோடு' பேசுறாம்மா!" என்று படபடத்துக் கொண்டு வந்து சொன்னான் ரமணி; அம்மா 'பாதரைப்' 'பாதிரி' என்று திருத்திச் சொன்னதாலும், 'பாதர்' என்று சொல்லக் கூடாது என்று தடுத்ததாலும், அவள் பேச்சை ரஸிக்காமல், அங்கு இருக்க ஆவலில்லாமல் மீண்டும் வாசற்கு ஓடிவிட்டான்!

கொஞ்ச நாட்களாகப் பக்கத்துக் காம்பவுண்டுக்குள்ளிருந்த மாதா கோயிலில் கலகலப்பு ஏற்பட்டிருந்தது. ஓரிரண்டு நாட்களாக கிறிஸ்தவர்கள் இரு பாலாரின் நடமாட்டமும் பெருகியிருப்பதையும், புதுப்புது முகங்கள் தென்படுவதையும் கவனித்த சுந்தரம், "என்ன விசேஷமோ?" என்றுசொல்லிக்கொண்டிருந்தார்.

"இப்போது அதுபற்றி விசாரிக்கத்தான் அத்தனை பரபரப்பாக மாடியிறங்கி ஓடிப் போய் வாசலில் போகும் பாதிரியை வழி மறித்துப் பேசுகிறாரா!" என்று ஆச்சரியப்பட்டாள் லக்ஷ்மி.

"என்ன விசேஷமோ சர்ச்சிலே!" எனக்கேட்க நினைத்திருந்த அவள், கணவர் பிரித்த தபாலுடன் வருவதைப் பார்த்து, "என்ன விசேஷம் கடிதத்தில்?" என்று கேட்டாள். புனிதமான மாதா கோயிலை உச்சரிக்க வேண்டிய இடத்தில், குப்பைக் கூடைக்குப் போகும் கடிதத்தைப் பிரஸ்தாபித்தாளே—அதனால்தானோ ஏற்பட்டது மனச் சுணக்கம்? தெய்வம் தண்டித்து விட்டதோ?

"லக்ஷ்மி! உன்னுடைய பயத்தை நினைச்சால் வேடிக்கையாயிருக்கு எனக்கு!" என்று சிரித்தார் சுந்தரம்.

பக்கத்துக் காம்பவுண்டுலே இருக்கிற சர்ச்சுலே என்ன நடக்கப் போகிறதோன்னு உங்களுக்கு அவ்வளவு அக்கரையும் கவலையுமாயிருந்தால், நாளைக்கு வீட்டுக்கே வரப்போகிற கிறிஸ்தவ விருந்தாளிகளுக்கு எப்படி நடக்கப்போகிறதோ. என்னமாய் நடத்தப்போகிறேனோன்னு எனக்கு எவ்வளவு கவலை இருக்காது?" என்றுசொன்னாள் லக்ஷ்மி, நெற்றி சுருங்க.

மனைவியின் கவலைச் சிறப்பினை உணர்ந்தார். ரசித்தார் சுந்தரம். எத்தனையோ பேர்களை அதிதிகளாகிக்கொண்டு, திறம்பட அவள் விருந்தோம்பியிருக்கிறாள். அவர்களின் மனதிருப்தியால் தானும் திருப்தியுற்றிருக்கிறாள். இப்போது, இந்த கிறிஸ்தவ விருந்தினருக்குக் குறையில்லாமல் விருந்து ஓம்பல் இயலுமோ என்பதே அவள் கவலை, பயம்.

மிஸ்டர் ஆடம்ஸும், அவர் குடும்பத்தினரும்தான் விருந்தாளிகள். மொத்தம் நபர்கள் ஐவர் தான். ஆனால் அவர்களுக்கு உகந்த அறுசுவை உண்டியை அவள் தயார் செய்ய முடியுமா? முடியாது!

முன்னர் ஒரு முறை மிஸ்டர் ஆடம்ஸைமட்டும் விருந்தினராகக் கொண்டபோதே, "அவருக்குச் சரியில்லை நம் சாப்பாடும், அதிதி ஸத்காரமும்" என்று நினைத்திருந்தாள் அவள். இப்போது அவரும், அவர் குடும்பத்தினரும் வருகிறார்கள் என்பதால், காயம்பட்டுக்கொண்டு அழும் குழந்தைக்கு அதனாலேயே வசவும்கூட கிடைத்தாற்போலாச்சு லக்ஷ்மியின் வேதனை.

"இங்கே இறங்குவதில் அவர்களுக்கும்தான் என்ன சௌகரியம்!...அப்போ அவர் சாப்பாட்டைக் கொறிச்ச கண்றாவியைத்தான் பார்த்தோமே! அவருக்கும் வயிறு நிரம்பல்லே! அரைகுறைச் சாப்பாடு என்று நமக்கும் வேதனை! இப்போதும் அதேவேதனை நமக்கு. அவர்களுக்கும் சுகமில்லாத போஜனம்! ஏன் இந்த அவஸ்தை! சிவனேன்னு அவாளும் சர்ச்சுலேயே இறங்கிருக்கக்கூடாதோ!" என்பது லக்ஷ்மியின் கட்சி.

"சிவனேன்னு எப்படி யிருப்பார் அவர், கிறிஸ்துவர்! அதான் இங்கேயே வந்திருக்கப்போறார்!" என்று இடக்காகப்பதில் சொல்லி லக்ஷ்மியை மடக்கினார் சுந்தரம். சரியான பேச்சோ, அசட்டுப் பேச்சோ அவர் பேசியது—நகைச் சுவையுள்ளதோ, நேர்மையுள்ளதோ அவர் கூறியது—ஆனால் அவருக்குத்தான் ஆதரவு கிடைத்தது. அவர் கட்சி வலுப்பெற்றது குழந்தைகளாலே.

பக்கத்திலுள்ள சர்ச்சில் இவ் வருஷம் விசேஷக் கொண்டாட்டம், என்று கண்டாள்.

"எப்படியும் வரவேண்டாம் எனப்போவதில்லை நாம். முடிந்ததைச் செய்வோம், ஒரு நாளைச் சமாளிப்போம். பழம், பிஸ்கட் வாங்கிபோட்டு குறை வயிறுகளை நிரப்புவோம்! தினிக்குறைதானு பொல்லாப்புக்கொணரும்? இன்முகமும், தயக்கமோ வேற்றுமையோ இல்லாத சகஜ உணர்ச்சியும், மற்ற குறைகளை மறக்கடிக்கும்!'' என்று சமாதானங் கொண்டாள் லட்சுமி.

"லக்ஷ்மி! நீயும் வாயேன்! பாரேன். சர்ச்சு அலங்காரத் தோரணங்களை!" எனக் கூவியழைத்தார் சுதந்தரம். குழந்தைகள் நால்வரும், சுந்தரமும், மொட்டை மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள் மாதா கோயிலை. லக்ஷ்மியும் போனுள், கணவரின் அழைப்புக் கேட்டு.

"மிஸஸ் ஆடம்ஸ் எப்படிப்பட்டவள்?'' என்றகேள்வியும் கவலையும் எழுந்தது லக்ஷ்மிக்கு. "இங்கே அகத்தில் இறங்க நம்பியவள் சகஜமான சுபாவமுள்ளவளாகவேயிருப்பாள்'' என்ற சமாதானம், தினே தினே கிளம்பும் அரசியல் சமாதானங்களை ஒத்ததாகத்தான் இருந்தது... சமாதானங்களின் உண்மைச் சிறப்பும் தன்மையும் சிக்கல்களை நேரடியாகச் சந்திக்கும்போதுதானே வெளிப்படும்! எவ்வளவு சமாதானங்கள் செய்து கொண்டாலும் லக்ஷ்மியின் மனதுக்கு உண்மை சமாதானம் ஏற்படவில்லை. ஆனுல் நல்லவேளை படே படே அரசியல் சமாதானங்கள் எளிது காணுத வெற்றியை, லக்ஷ்மிமறுநாள் கண்டாள் மன நிம்மதியுற்ருள்.

வந்தாள் ஸ்ரீமதி ஐடா ஆடம்ஸ்

நிதானமாக அமைந்த உருவத்தோற்றம். களை பொருந்திய முகம். சாவதானமான பார்வையுடைய கண்கள். வயதும் நடுத்தர வயதுதான். ஏறக்குறைய லக்ஷ்மியின் வயதையொத்தவள்தான். எளிமையும் இனிமையுமுள்ள உடை: தழையத் தழையப்புடவை. சொற்ப நகைகள். ஐடாவைப் பார்த்த லக்ஷ்மி, "அநாவசியமாகக் கலங்கிக்கொண்டிருந்தோம்!'' என்று சொல்லிக்கொண்டாள். நெற்றியில் பொட்டு இல்லாததும் ஓரிரண்டு நகைக் குறைவுகளும் தான் ஐடாவைக் கிறிஸ்தவப்பெண் என்று எடுத்துக்காட்டும்...மற்றபடி ஒரு புதுமையும் இல்லை...பயம் வீணே என்று ஐடாவைப்பார்த்ததும் எண்ணியது அவள் மனம். ஆம்......மனம்... வெறுப்புகளை விருப்புகளாகவும், தீமைகளை நன்மைகளாகவும் நொடியில் செய்யும் வல்லமையுள்ள மனம் அந்தப் பெண்மனம் எத்தகைய நுணுக்கங்களுடையது என்பதை அறிந்துணர்ந்து சுந்தரமும் வியந்தார் பிரமித்தார் கொஞ்ச நேரங்கழித்து.

"என்ன, லக்ஷ்மி!......சாப்பாடு திருப்தியாயிராதே அவர்களுக்கு என்றுதான் உன் கவலை முக்கியமாய் இருந்ததல்லவோ? ஆனுல் அவர்கள் "சர்ச்சில் தான் சாப்பிடணும்!'' என்றபோது "இங்கேதான் சாப்பிடணும்!'' என்று ஒரே வற்புறுத்தலில் இறங்கி விட்டாயே!'' என்ருர் சுந்தரம் மனைவியிடம். விருந்தாளிகள் காலைப் பிரார்த்தனையையும் உணவையும் முடித்துக்கொண்டு வருவதற்குச் சர்ச்சுக்குப் போயிருந்தார்கள்.

"பின்னே, நம்ம வீட்டில் விருந்தாளிகள்னு பேரு...அங்கே சாப்பிடப் போகிறதாவது! எனக்கு அவமானமாயிருக்கு!'' என்ருள் லக்ஷ்மி.

"அவர்தான் சொன்னுரே,'' சர்ச்சிலே இறங்கவேண்டியவர்கள் தான். ஆனுல் மனைவிக்கு இங்கே இறங்க ஆசை! பூஜை, சாப்பாடு முதலானவற்றுக்கு சர்ச்சுக்குப் போகவேண்டியதுதான் தங்கள் கடமை!' என்று சொன்னுரே!'' என்று கூறினுர் சுந்தரம்.

லக்ஷ்மி ஒப்புக்கொண்டாள், ஐடாவும் அதேபோல் தன்னிடம் கூறியதாக அவர்களின் காலனியில் எல்லோரும் கிறிஸ்தவர்கள் என்பதால் ஹிந்துக்களுடனும் தங்கிப் பழகவேண்டும் என்று ஐடா விரும்பி இங்கே வந்திருப்பதைப் புகழ்ந்தாள். "டிபனுவது இங்கே சாப்பிடாவிட்டால் விடுவேனு நான் அவர்களை!'' என்ருள்.

"மனமாற்றம்னு கதைகளில் வருகிறதுபோல் நடக்கிறதா?', என்று முறுவலித்தார் சுந்தரம். "எனக்கென்ன துவேஷமா. கோபமா, மாறுகிறதற்கு! கவலையாயிருந்தது கொஞ்சம்–அது போய்விட்டது — அவ்வளவுதானே!—மனமாற்றமென்ன?'' என்று அவரைக்கேட்டாள்லக்ஷ்மி.



"ஓஹோ, சரி...லக்ஷ்மி ...டிபனோடு ப்ரூட்ஸாலட் பண்ணிவிடேன்!'' என்ருர் சுந்தரம் சிரித்தவாறு.

"ஒரே பழத்தில் எல்லாப் பழங்களின் வாசனையையும்புகுத்திக் கொடுக்க முடியுமா? எல்லாப்பழதினுசுகளும் நிறையத்தான் வாங்க முடியுமா?– இதோ. 'ப்ரூட்ஸாலட்' தான் பண்ண முடியும்!'' என்று லக்ஷ்மி செய்து கொடுத்ததை உட்கொள்ளும் சமயத்தில், "மனமாற்றம்'' பற்றி அவள் போட்ட போடு இன்னது என்பதை ஆடம்ஸுக்குக் கூற விரும்புவதாகச் சொன்னுர் சுந்ரம்.!

"அழகுதான்!......நான் சொன்னதை யொன்றையும் அவரண்டை சொல்ல வேண்டாம்!.........சொன்னுல் ரொம்ப இங்கிதமாய் மரியாதையாய் இருக்குமே!''—



என்று கடிந்தாள் லக்ஷ்மி.

"எல்லா மதங்களோட நல்ல அம்சங்களையும் சேர்த்துண்டு நடந்துண்டால் 'ப்ரூட்' ஸாலட் மாதிரியிருக்கும் காலம்னு ஏதாவது பொது வாய்ச் சொல்லிவிட்டுப் போங்களேன்! இரண்டு மதக்காரர்கள் பேசறது இந்த ரீதியில் இருக்க வேண்டாமோ—அதுவும் இந்தக் காலத்துப் போக்குக்கு! நான் 'ப்ரூட் ஸாலட்' பண்ணித் தந்துடறேன்—என்னை மட்டும் இழுக்க வேண்டாம் பேச்சில்! ஆமாம்!... அவர்கிட்ட எதையாவது என்னைப் பற்றி பீற்றிக்கப் போறேள்-வெட்கக்கேடு!... அவர் பெண்டாட்டியைப்பற்றி ஒரு துரும்பு சொல்லிக்கிறதாகத் தெரியவில்லை!" என்றாள் லக்ஷ்மி.

முற்பகல் முடியும் சமயம் மாதா கோயிலிலிருந்து திரும்பி வந்தனர் ஆடம்ஸ் குடும்பத்தினர். நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பர்களை வரவேற்று அளவளாவுவது போல அவர்களை அணுகிப்பழக ஆரம்பித்துவிட்டார்கள் சுந்தரம்வீட்டார்.

மிஸ்டர் ஆடம்ஸ் மட்டும் இளைப்பாகப் படுத்தார். சுந்தரத்தின் பெண் இந்திரா தன் வயதையொத்த கிரேஸுடன் வெகு மும்முரமாகப் பேச்சில் லயித்தாள். ரமணியும் உமாவும் ஆடம்ஸின் பிள்ளை மைகேலுடன் மூன்று சக்கர சைக்கிளையும் மரக் குதிரையையும் வைத்துக்கொண்டு பொழுது போக்கினார்கள். ஆடம்ஸின் மூன்று வயதுக் குழந்தை அம்மாவின் பக்கத்தில் படுத்து உறங்கியது. லக்ஷ்மியின் இரண்டரை வயதுக் குழந்தை தொட்டிலில் துயின்றது.

"அம்மாகிட்டத்தான் தூங்கணுமாமோ?" என்றாள் லக்ஷ்மி, ஆடம்ஸின் குழந்தையைச் செல்லமாகப் பார்த்துக்கொண்டே.

"பாருங்களேன்......என்னண்டை வரமாட்டாளாம்!" என்று கொஞ்சினாள். மென்சிரிப்பு பூத்தாள் ஐடா. "இவளும் தொட்டியில் தூங்கினால்தான் உங்களுக்கு மனசு சமாதானம் ஆகும்னு எனக்குத் தெரிகிறது! அதுக்கு என்ன கவலை?"—என்றாள்.

எல்லாமதத்தினரும்...சகலரும் ஒரு நிலையிலேயே-ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருப்பதுதான் கடவுளுக்குச் சம்மதம். ஆனால் அது எங்கே நடக்கிறது உலகில்? புது இடம், வேற்றுமனிதர்கள் என்று அந்தக் குழந்தை அம்மாவிடமே படுத்துறங்கியது. தொட்டிலில் படுக்க இசையவில்லை—ஆனால்—இந்தக் குழந்தைமூலம் ஐடாவும் லக்ஷ்மியும் மகத்தானதொரு நட்பின் பிணைப்புக்குட்பட்டுவிட்டார்கள்! உலகின் பற்பல உயர்வுத் தாழ்வுகளால்தானே பக்திப் பிணைப்பு ஏற்படுகிறது?—லக்ஷ்மியும் ஐடாவும் குழந்தைகளைவிட அதிக நட்புரிமையுடனும் லளிதத்துடனும் பழக ஆரம்பித்துவிட்டார்கள்.

'அம்மாவை நோக்கி ஓடி வந்தாள் கிரேஸ். "அம்மா அம்மா! இந்திரா ஒரு விஷயம் சொன்னாள் கேளேன்! இப்போ எலிஜபெத் ராஜ குமாரிக்குக் குழந்தை பிறந்திருக்கே!— அது யாராம் தெரியுமா? காந்திஜியாம்! "இந்தியா தேசம் என்னுடையதாக்கும்!" னுசொல்லி மறுபடியும் இங்கிலீஷ்காரர்களுக்கே இந்தியா கிடைக்கும்படி பண்ணிட போறாராம்!" என்றாள் தாயிடம். இதற்குள் கிரேஸைத் தொடர்ந்து வந்த இந்திரா பெரியவர்கள் இருவரும் வேடிக்கையாக விழிப்பதைக் கண்டு "எங்கள் பள்ளிக்கூடத்தில் தான் சொல்லிக்கொண்டார்கள்!......என்னமோ கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்!" என்று குழறினாள்.

"என்னடி கணக்கு! ஜோஸ்யக் கணக்கு ரொம்பத் துள்றதோ அவா மூளையில்!" என்று சிரிப்பை அடக்கிக் கோபம் தொனிக்கக் கேட்டாள் லக்ஷ்மி.

"என்னமோ— வாத்தியாரம்மாக்கள்தான் காந்திஜி செத்துப் போனதும் இந்த ராஜகுமாரி எலிஜபெத் வயிற்றில் குழந்தையாய்ப் போய்விட்டார். அவர் செத்துப் போனதுக்கும் இந்தக் குழந்தைப் பிறந்ததுக்கும் சரியாயிருக்கு!' என்றுசொல்லிக்கொண்டார்கள்"-

தயங்கித் தயங்கி பேச்சை முடித்தாள் இந்திரா.

"நாங்கள்ளாம் உங்கள் சமர்த்தான வாத்தியாரம்மாக்கள் இல்லே! நீ மென்று முழுங்க வேண்டாம் பதில் சொல்ல!... என்னமோ காந்திஜியைப்பற்றி நல்லதாப் பேசாமல் கண்டபடி பேசறதாமே... பார்த்தீர்களோல்லியோ பள்ளிக்கூடத்தோட லட்சணத்தை!" என்று கோபமும் சிரிப்புமாக பெண்ணையும் ஐடாவையும் மாறி மாறிப் பார்த்துச் சொன்னாள் லக்ஷ்மி.

“நமக்குக் கிடைத்த சுதந்திரம் நிலைக்குமான்னு சந்தேகப்படுகிற நிலையிலே இருக்கோல்லியோநாடு? மறுபடியும் பிரிட்டிஷார் கைக்குப் போய்விடும் என்று பயப்படுகிறதுக்கும், இப்போ பிறந்திருக்கும் ராஜகுமாரன் காந்திஜிதான், மறுபடியும் இந்தியாவை உரிமையாக்கிக்கொள்வார் என்றும் எவ்வளவு பொருத்தமா ஜோடித்திருக்கிறார்கள்... பாருங்களேன்!... பள்ளிக்கூடங்களில் தான் தினுசு தினுசான பேச்சுக்கள் கிளம்பும்...” என்றாள் ஜடா, இந்திராவின் குன்றிப்போன உற்சாக மனம் மீள வேண்டுமென்று.

“நிஜந்தான்!...இந்தக் கற்பனையெல்லாம் என்ன அதிசயமாயிருக்கு!...இன்னொரு அதிசயம் பாருங்கோ, ஜடா! காந்திஜி போய் எத்தனை மாசமாகிறது, நவம்பரில் ராஜகுமாரன் பிறந்த சமயத்துக்கு! சரியாக யோசனை... கற்பனை—தட்டியிருக்கே!” என்றாள் லக்ஷ்மி ஆச்சரியமுடன்.

விரல் விட்டு எண்ணினாள் ஜடா!...“ஓ! ஆமாம்!...” என்றாள்.

“நல்ல யோசனைக்காரிகள் வாத்தியாரம்மாக்கள்!...உம், இந்த பன்னெண்டு வயசுப் பொண்ணு அரைகுறையாப் புரிஞ்சிண்டு நமக்குச் சொல்றதுக்குள்ளே தடுமாறினது...” சிரித்தாள் லக்ஷ்மி.

“பாவம் அவளுக்கு பின்னே எப்படி சொல்லத் தெரியும்?...” என்றாள் ஜடா. சிரிப்பை நிறுத்தினாள் லக்ஷ்மி.

“நமக்கும் வேடிக்கையான பேச்சுத்தான் இது!...ஆனால் காந்திஜியைப்பற்றிப் பேசுகிறதாவது இப்படின்னுதான் எனக்கு முதலில் கோபம்! காந்திஜி கடவுளாகிவிட்டார்னு நினைக்காமல், மறுபடியும் பிறப்பார், இந்தியாவுக்கு எதிரியே ஆகிவிடுவார்... என்றெல்லாம் தோணலாமா? பேசலாமா...”

இந்திரா விசுக்கென நகர்ந்து கொண்டாள். “வாங்கோ, கிரேஸ்! ஏதோ வேடிக்கையாய் நடந்த பேச்சு பிரமாதமாப் போச்சு இவளுக்கு! காந்தி பக்தி இவளுக்குத்தான்போலிருக்கு!...” என்றாள், அங்கிருந்து கிரேஸுடன் மறைந்தாள். பிற மதங்களில் உயர்வு இல்லை, பெருமையில்லை, தெய்வம் இல்லை என்று நினைப்பது எத்தகைய மதியீனமோ, அப்படிப் பட்டதாக, லக்ஷ்மியின் பேச்சு, இந்திராவுக்குத் தொனித்தது.

“உம். உம்! கோபம் வராதா? அவளோட அப்பாவானால் காந்திஜி கடவுளாகி விட்டார்னு படத்திற்கு மாலை போட்டுக் கும்பிடுகிறார்—தன் பெண், காந்திக்குப் பிறவியுண்டுன்னு சொல்கிறாள் என்றால்......”

ஜடா குறுக்கிட்டாள் லட்சிமியின் பேச்சில். “ஏன்......அப்படியானால் காந்திஜிக்கு மட்டும்தான் பிறவிகிடையாதா? இறந்தவர்கள் மற்றவர்களுக்கு உண்டா?” என வினவினாள்.

“ஏன் கிடையாது! ஜனன மரணச் சக்கரம் சுழல்றதே மற்ற பேருக்கு! யாரோ மகாத்மாக்களுக்குத்தான் பிறவி கிடையாது! பிறவிகள் கூடாது, மோக்ஷம் வேண்டுமென்றுதானே பகவானைப் பிரார்த்திக்கணும்! பிறவிகள் இல்லையோ......”

“என்ன, அப்படியா சாஸ்திரம் சொல்கிறது?”

“ஆமாம்! இல்லையோ பின்னே?”

“எங்கள் வேதத்திலே அப்படிக் கிடையாது. இறந்தவர்கள் எல்லோரும் ஆண்டவனிடத்தில் இருந்து விடுவதாகத்தான் சொல்கிறது! ஒருவன் ஒருதடவைதான் பிறக்கிறான். இறந்ததும் ஏசுவிடம் சேர்ந்துவிடுகிறான்!”

“அப்படியா உங்கள் சாஸ்திரம் சொல்கிறது?”

“ஆமாம்”

“எப்படியிருந்தாலும் சாஸ்திரம் மனதைப் பரிசுத்தப்படுத்தத்தான் என்பது தெரிகிறது. கடவுளிடமே இருக்கிறது போன உயிர், என்றால் ஒரு ஆறுதல்! திரும்பவும் வேறு இடத்தில் பிறந்திருக்கிறது அந்த உயிர், பூலோகத்துக்கு வந்துவிட்டது, வேறொருவரிடம் வளருகிறது என்றாலும் ஒரு திருப்தி, சாந்தி இல்லையா?”

“ஆமாம்.”

“எங்கள் வீட்டில் மாடு கன்று போட்டது. அதற்கு முதல்நாள் மாடு கறப்பவனின் குழந்தை போய்விட்டது. “உன் குழந்தைதான் இங்கு வந்திருக்கப்பா! கவலைப்படாதே!” என்று சொன்னோம். மறுநாளே அவன் பெண்டாட்டி வந்தாள், கன்றுக்குட்டியைக் கொஞ்சி முத்தமிட்டுவிட்டுப் போனாள்.

ஜடாவின் முகம் ‘என்னமோ போல்’ இருப்பதாகத் தோன்றியது லக்ஷ்மிக்கு. “எப்படியோ சோர்வாயிருக்கிறீர்களே, ஜடா! சற்றுப்படுங்கள்!” என்று கனிவுடன் கூறினாள்.

பம்பு அடித்தாற்போல ஜடாவின் கண்களில் நீர் சுழன்றது. பொட்டென்று ஒரு நீர்த்துளி விழுந்தது உருண்டு.

“ஏனம்மா—”

கண்களைத் துடைத்துக்கொண்டாள் ஜடா. “எனக்கு ஒரு பிள்ளை போய்விட்டான் போனவருஷம். அவனை தேவதூதனாகக் கனவுகளில் காண்கிறார்களாம் அவரும் குழந்தைகளும். எதிரில் பேசுவது போல பல பேசுகிறானும், எல்லாம் சொல்கிறார்கள் பாடம் ஒப்புவிப்பதுபோல. எனக்கும் எப்போதாவது கனவில் வருவானோ என்று பார்க்கிறேன்! ஒரு தடவை கூட வந்ததில்லை!—” என்று கூறி பொலபொலவென கண்ணீர் உகுத்தாள் ஜடா.

“ஜடா! நான் சொல்கிறேன் காரணம்! உங்களுக்குக் கனவில் வராத பையன் உங்கள் வயிற்றிலேயே இருக்கிறான்! வருத்தப்படவேண்டாம்.” என்று சட்டென பதிலளித்தாள். லக்ஷ்மி.

ஏறிட்டு லக்ஷ்மியைப் பார்த்தாள் ஜடா. பனித்துளி படர்ந்த மலர் போல எக்களிப்பு எட்டிப்பார்த்தது அவளுடைய ஈரக்கண்களிலே. மகிழ்ச்சியோ, ஆறுதலோ, வெட்கமோ—எதையோ சூசிப்பித்தது அவளுடைய முகத்தில் அரும்பிய புன்னகை.

“அதே பிரசாந்தமான முகம் தான்!” என்று லக்ஷ்மியை நினைக்கச்செய்தது அன்றுமாலை ஊர்வலம் வந்த அன்னை மேரியின் தோற்றம். உடல் நிற வித்தியாசமும், உடையின் பாணியும், ‘வேற்றுமை’களாகத் தோன்றவில்லை, அவளுக்கு. அவளுக்கு ஆச்சரியம் அளித்தது மேரியின் உருவச்சிலையின் தோற்றச் சிறப்புத்தான்.

“இவ்வளவு அழகான உருவத்தைப்பார்த்தாலே பக்தி பிறக்கிறதே! தெய்வத்தையே பார்ப்பது போல மனதில் பரவசம் எழுகிறதே!” என்று நினைத்தாள். ‘வெளேர்’ என்றிருந்த மேரியின் சிலையும், அருள் சுரக்கும் பார்வையும் கண்டு சொக்கிப் போனாள்.

“என்ன!...... கிறிஸ்துவைக் காணோமே! கிறிஸ்து விக்கிரகம் இருக்கும் என்றல்லவோ எதிர்பார்த்தேன்!—” என்று தன் சந்தேகத்தை வெளியிட்டாள் லக்ஷ்மி, கணவரிடம்.

உயரமான மேடைபோல் ரதம். விமானம் போன்ற அமைப்பு இல்லாதது. நடுவில் மேரியாள் உருவம். ஆள் உயரச் சிலை. வெண்மையானது. நாலு மூலைகளிலும், இறக்கைகளை வைத்துக் கொண்டு பறக்கும் நிலையில் நான்கு குழந்தைகளின் உருவச் சிலைகள். அவையும் வெண்மையானவை. குழந்தைகளின் கைகளில் பூமாலைகள், ரதத்திற்கும் அங்காங்கு பூமாலைகள். இவ்வளவேதான் அலங்காரம்—ஆனால் அதன் அழகு வர்ணனைக்கு அடங்காது

மேரியாளின் எழிலுருவம் நின்றிருந்த இடத்தில், ஏசுவின் உருவம் நின்றிருந்தால் இத்தகைய உவகைப் பெருக்கு ஏற்பட்டிராது என்றே தோன்றியது லக்ஷ்மிக்கு. எனினும், சந்தேகம் தீரவேண்டாமா? கேட்டாள் "ஏசு எங்கே!" என்று.

"கிறிஸ்து இனிமேல்தான் பிறக்கப்போகிறார்! கிறிஸ்துமஸ் வரப்போகிறது!.........இப்போது சீமந்தம் போன்றதொரு சடங்கு இது...மேரிக்கு நடத்துகிறார்கள்." என விளக்கினார் சுந்தரம்.

"இந்தச் சர்ச்சுக்குத்தான் மாதா கோயில் என்னும் பெயர் ரொம்பப் பொருந்தும். கிறிஸ்துவர்களிலேயே கிறிஸ்துவைப் பூஜை செய்பவர்கள் சிலர்; கிறிஸ்துவை உலகுக்கு ஈந்த மேரியைப் பூஜிப்பவர்கள் சிலர். பக்கத்துச் சர்ச்சுக்காரர்களுக்குமேரி முக்கியமானவள்" என்றும் தெரிந்து கொண்டாள் லக்ஷ்மி, பேச்சுப்போக்கிலே.

அதற்குமேல் கேள்விகள் கேட்கவோ பேசவோ நிலைமை சரி இல்லை. மேரியாளை பவனி அழைத்துச்செல்லும் ரதத்திற்கு இருமருங்கும் வரிசையாக, ஒழுங்காக, நிதானமாக நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவர்கள் இருபாலாரும்; குழந்தைகள் ரதத்திற்கு முன்னே சென்றார்கள். வலதுகை மெழுகுவர்த்தி விளக்குகளைப் பிடித்திருக்க, இடதுகையில் இருக்கும் காகிதத்தில் எழுதியிருக்கும் பாட்டின் அடிகளைப் பார்த்துப் படித்துக்கொண்டே, மென்குரலில் பாடிக்கொண்டே ஒவ்வொருவரும் நடந்துசென்ற காட்சியைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தார்கள் சுந்தரம் குடும்பத்தார். ஆடம்ஸும், ஐடாவும், குழந்தைகளும்கூட அந்தக்கூட்டத்தினிடையே அதே ஒழுங்குடன் போவதைப்பார்த்து. மெல்ல ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டிக்கொண்டார்கள் இந்திராவும் ரமணியும். ஊர்வலத்தின் பிரசாந்தமும், நிசப்தமும், இவர்களின் ஓங்கிய குரல்களைத் தணித்துவிட்டது! லக்ஷ்மி எப்படிப் பேசுவாள். ஏன் பேசுவாள்?

எத்தனை தினுசு ஆடையலங்காரங்கள் செய்துகொண்டிருந்தாலும், எப்பேர்ப்பட்ட மனப்போக்குடையவர்களானாலும், தெய்வத்தின் சந்நிதி என்னும் நினைப்பால் ஏனையோர் முகங்களும் ஒரே உணர்ச்சி காட்டுபன வாய்ச் சலனமற்று இருந்ததை நினைக்க, மாபெரும் அதிசயமாக இருந்தது லக்ஷ்மிக்கு.

மாதா கோயிலிலிருந்து திரும்பி வந்த ஆடம்ஸ் குடும்பத்தாரை அன்றிரவு விடை கொடுத்து அனுப்ப தன் மனசு ஒப்பாது போலிருக்கு என்றும் உணர்ந்த போது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் 'நல்லுணர்ச்சி' பின் சந்நிதியில் வேறு புல்லுருவி உணர்ச்சிகளும் புனிதம் ஆகும் என்பதை அறியாதவளா லக்ஷ்மி! மனசில்லாது ஐடாவை விடை கொடுத்து அனுப்பும்படி எந்த உள்ளுணர்ச்சி மாயம் செய்துவிட்டது என்பதை அறிவாள். அதனாலேயே மனங் கலங்காமல் இருந்தாள் ஐடா விடை பெற முன் வந்தபோது.

"நான் சொன்னது நினைவிருக்கட்டும் ஐடா. கவலைகள் வைத்துக் கொள்ளக்கூடாது நீங்கள்!—என்ன?" என்றுகேட்டாள் லக்ஷ்மி.

"ஆகட்டும், மிஸ்ஸஸ் சுந்தரம்!-ஆனால் எனக்கொரு யோசனை! என் பிள்ளை உங்கள் வயிற்றில் பிறக்குமானால் இன்னும் சீக்கிரம் பார்ப்பேனே என்று ஆசைப்படுகிறேன்!" என்றாள் ஐடா. இப்போது அவள் முகத்தில் குறும்பும் இருந்தது!

திடுக்கிட்டுத்தான் போனாள் லக்ஷ்மி. "போகிறது. அப்படியே தான் இருக்கட்டுமே! சமாசாரம் தெரிந்ததும் ஆஸ்பத்திரிக்கே என்னைப் பார்க்க வருவேன் இல்லையா? மறுபடியும் பார்ப்போம் அடிக்கடி என்று எனக்கு ரொம்பவும் சந்தோஷம்தான்!" என்று பதிலுறுத்தாள் லக்ஷ்மி.

"இனி எப்படியும் நம் நட்பு வலிவு பெறும்!" என்னும் ஆறுதலுடனும் தாபத்துடனும் தோழமையுடனும் லக்ஷ்மியும் ஐடாவும் விடைபெற்று பிரிந்தார்கள்.

அவர்கள் போனபின் லக்ஷ்மி சொன்னாள் கணவரிடம் என்ன இருந்தாலும் மனசு என்கிறது ஒன்றுதான் யாருக்கும்!...கிறிஸ்தவர்களாவது இந்துக்களாவது!—வாசலில் ஆடம்ஸும் பாதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள்—இரண்டு பாதர்கள்!" என்று இங்கிலீஷில் முழக்கினான் மைக்கேல். என்ன தீவிரமாக அவனைக் கடிந்து கொண்டாள் ஐடா! என்று உதாரணங்களுடன் ஆடம்ஸின் மனைவியைப் புகழ்ந்தாள் லக்ஷ்மி. நேற்று மிஸஸ் ஆடம்ஸ் எப்படிப்பட்டவளோ! என்று வாய்க்குவாய்ச் சொல்லிக்கொண்டிருந்த அதே லக்ஷ்மி!......

"லக்ஷ்மி!............என்ன மாயமோம்மா!......நீ அவளைப் புகழ்ந்தால் அவர்கள் இருவரும் உன்னைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள் கடிதத்தில்!" என்று மொழிந்தவாறே கடிதத்தைக் கொணர்ந்தார் சுந்தரம்.

"என் மனைவியின் மனதிலிருந்த ஒரு பெருங்குறை தீர்ந்துவிட்டது, உங்கள் மனைவியின் சிறந்த தோழமையினால்.

நானாவிதச் சொற்களும் அவற்றின் நானாவித ரூபங்களையும் பற்பல தினுசாகச் சொல்லுவது அகராதி. நமக்கு ஒரு சொல் விஷயமாக சந்தேகமோ, தேவையோ, குறையோ, அதிருப்தியோ இருந்தால் அகராதியை நாடுகிறோம். அதன் உதவியால்—அதன் உதவால் நம் தேவை பூர்த்தியாகிறது. மனம் திருப்தியடைகிறது. குறை நீங்கி மன நிறைவு ஏற்படுகிறது—அதுபோலவே பிற மதத்தினரின் உறவும், பல மதக் கொள்கைகளின் உதவியும் நாம் மனத்தத்துவத் தேவைகளையும் குறைகளையும் நிறைவு படுத்துகிறது என்பதை நான் உணருகிறேன். என் மனைவி, ஸ்ரீமதி சுந்தரம் அளித்திருக்கும் மன நிறைவை என்றும் மறவாள்"

இதுதான் மிஸ்டர் ஆடம்ஸ் எழுதிய கடிதத்தின் சாராம்சம். "என்னடியம்மா......என்ன மன நிறைவு அளித்தாயாம் நீ ஐடாவுக்கு!" என்று கேட்டார் சுந்தரம். அவருக்குப் பெண்களின் பேச்சின்

சாராம்சம் என்னமாய்த் தெரியும்! லக்ஷ்மி சொன்னுள் விவரம்.

"பாவம்!......அந்தப் பெண்ணின் மனக்குறை தீரவேண்டியதுதான்!......யார் மனதில் இருந்தாலும், இருக்காவிட்டாலும் போன பையன் தாயின் மனதில் இருந்துகொண்டுதான் இருப்பான்!.......எனினும் அவள் குறைப்பட்டாள், கனவில் காணவில்லையென்று! லக்ஷ்மி சொல்லியிருக்கும் சமாதானம் உண்மையான ஆறுதல்தான்!................ஹிந்து மதக்கொள்கை......இந்த மறுபிறவிக்கொள்கை......அந்தக் கிறுஸ்தவப்பெண்ணுக்கு ஆறுதலளிப்பது வரவேற்கத்தக்க அம்சம்தான்!" என நினைத்துக் கொண்டார் சுந்தரம்.

"ஊருக்குப்போனதும், நன்றி கூறும் கடிதம் எழுதவேண்டுமென்ற கடமையுணர்ச்சியால் அவர் எழுதியிருக்கிறுர்!" என்று அவரும் எண்ணவில்லை, லக்ஷ்மியும் நினைக்கவில்லை. அவர்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போகும்போதே மனமார்ந்த நன்றி மொழிகள் கூறிவிட்டுத்தான் போயிருந்தார்கள், "கர்ப்பிணியான மேரிக்கு....அவளுடைய உருவச் சிலைக்கு, இவ்வளவு அருமை பெருமையாக, ஆடம்பரமாக பூஜைகள், ஸ்தோத்திரங்கள் செய்தோம்........ஆனுல் அதே சமயம் பூரணகர்ப்பிணியான மிஸ்ஸிஸ் சுந்திரத்திற்குத் தொல்லைகள் கொடுத்தோம்!" என்று பலுகி பலுகி நன்றி கூறிவிட்டுத்தன் அவர்கள் சென்றுர்கள். அன்று முடித்துக்கொண்ட கடமைக்கும் மேலான அன்புச் சின்னமாகத்தான் இந்தக்கடிதம் வந்துளது என்று சுந்தரம் தம்பதிகள் நினைத்தார்கள்.

"அவர்களுக்கு நீங்கள் என்ன எழுதப்போகிறீர்கள்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"இப்போது சங்கதி எதுவுமில்லையே எழுதுவதற்கு! இருக்கட்டும், கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கூறி எழுதிவிடுகிறேன் அடுத்த வாரம்! உடனே கடிதம் போடணுமென்றுல்...இப்போதே போட்டுவிடுகிறேன். வாழ்த்துக் கூறிவிடுகிறேன்!" என்றுர் சுந்தரம்.

"வேண்டாம்... இப்போதே கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்பினுல் பொருத்தமாயிராது!... அடுத்த வாரமே எழுதுங்கள்!" என்றுள் லக்ஷ்மி.

அடுத்த வாரம்... சொன்னபடியே கடிதம் எழுதிப் போட்டார் சுந்தரம். ஆனுல் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் மட்டும் எழுதிக் கடிதத்தை முடித்துவிடவில்லை அவர். வேறொரு முக்கியமான செய்தியும் இருந்தது எழுதுவதற்கு.

"என்ன எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் லக்ஷ்மி. அவளுடைய சோர்ந்த முகத்திலும் புன்சிரிப்புப் பிறந்தது.

"பிறந்திருக்கிறுனே பயல்—அவனைக் கட்டாயம் வந்து பார்க்கணும் நீங்கள்!' என்றுதான் வேறென்ன? ஐடா, ஆடம்ஸ் சொன்னமாதிரி அவர்களோட பிள்ளைதான்னு நினைச்சு வந்தாலும்சரி,—இல்லை நர்ஸ் சொன்ன மாதிரி "ஜீஸஸ்"னு நினைச்சு வந்தாலும் சரி,—கட்டாயம் வரவேண்டியது அவசியம்னு எழுதிவிட்டேன்!" என்றுர் சுந்தரம்.

"சரி—ஆனுல்— அவர்களுடைய அகராதி உபமானத்துக்கும் நன்றி கூறி எழுதணும் என்று சொன்னீர்களே— எழுதவில்லையா?" என வினவினுள் லக்ஷ்மி.

"அவர்கள் வந்தால் நேரில் சொல்ல ஒரு முக்கியமான விஷயம் இருப்பதாகமட்டும் குட்டாக எழுதியிருக்கிறேன்! அப்போதுதான் அவர்களுக்கு வரணுமென்ற ஆதுரம் இருக்கும்!" என்றுர் சுந்தரம்.

சிரித்தாள் லக்ஷ்மி, மெல்ல.

குழந்தை பிறந்ததும், "ஒரு பெண், நாலு பிள்ளையா மொத்தம்! இது பெண்ணுய்ப் பிறந்திருக்கக்கூடாதோ!" என்று வருத்தப்படுவதுபோல சொன்னுர் அவர்—ஆனுல்—நர்ஸ், "இன்று ஜீஸஸ் பிறந்த நாள்!" என்று சொன்னதைக் கேட்டதும் அகம் மலர, முகம் மலர அவர் "அப்படியா பேஷ்!" என்று துள்ளியதைப்பார்த்தாள் லக்ஷ்மி.

"நமக்கு கிறிஸ்துமஸ் பண்டிகை கிடையாது, நமக்குத் தோன்றவில்லை இந்த விஷயம்!.....இப்போ நமக்கும்தான் எத்தனை சந்தோஷம் கிறிஸ்து பிறந்தநாளில் குழந்தை பிறந்திருக்கிறுன் என்று!" என எண்ணினுள் லக்ஷ்மி. சொன்னுள்.

சுந்தரத்திற்கு அகராதி உபமானம் நினைவுக்கு வந்தது. "எழுதிவிடப்போகிறேன் என் நன்றியை!" என்று துள்ளினுர்.

ஆனுல்........எழுதவில்லை!....... நேரில் அந்தக் கிறிஸ்தவ நண்பர்கள் வரணுமென்று எத்துப் பண்ணியிருக்கிறுர்!......லக்ஷ்மியும் கணவரின் எண்ணத்தை ஆமோதித்து ஒத்துழைத்தாள்!.........

ஆனுல் இவர்களுக்கும் மேலான எத்துப்பண்ணி, கிறிஸ்தவ நண்பர்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள், இந்திரா. "காந்திஜி மறுபடியும் பிறந்திருக்கிறுர் என்று சொன்னதற்கு சண்டை பிடித்தீர்களே என்னை! இப்போது கிறிஸ்துதான் பிறந்திருக்கிறுர் என்று பெருமைப்படுகிறீர்களே! இது நியாயமோ!" என்று கேட்கணும், அம்மாவை அவர்கள்முன் மடக்கணும் என்று நினைக்கிறுள்! ஆனுல் அகராதி உபமானம் இந்திராவையும் ஆட்கொண்டு விடத்தான் போகிறது!

தம்பி கிறிஸ்துமஸ் நாளில் பிறந்தது அவளுக்கும் உள்ளூற உவகைதானே!

காஷ்மீர்-துளஸீ
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P.& Co.
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி படை, புண்களுக்கு (கூடிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

நம்பிக்கை பெற்ற நஞ்சன் கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

ஏஜென்ட்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதராஸ்.
டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி | திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் – ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து-பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்-ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள்:—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,

45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதருஸ்.

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே!

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் பழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No. 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58E, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர், 179, SEA ST., COLOMBO.

RAHAMATH PHARMACY
(Estd 1925)

55, Parish Venkatachala Iyer St, G. T., Madras.

சகல வியாதிகளுக்கும் கைமேல் பலன் தரும்
யூனனி ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்யுமிடம்.

உத்தரவாதம் கொடுத்து ஆஸ்த்மா, ஈளை, சுவாச இருமல், சகல மேக வியாதிகள், குன்மம், சூதகவலி, சூதக கோளாறுகள், ரத்த மூலம், படை, சர்ம வியாதிகள் இவைகளுக்கு கைகண்ட யூனனி சிகிச்சை.

அநேக நற்சாட்சிகளை நேரில் பார்வையிடலாம்.
பரீக்ஷியுங்கள்.

உங்கள் எதிர்காலம்



பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர் காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம், 30மாத்திரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



1 பவுனில் 4 ஜதை
கவரிங் வளையல்கள்
கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,
சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சதி-பதி வாழ்க்கை

விஞ்ஞான ரீதியாக இல்லற வாழ்க்கையின் சிற்றின்பச் சிறப்புக்களை வெகு நுணுக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துப் போதிக்கும் ஒரே தமிழ் நூல்

"மணவாழ்க்கையின் - - மர்மங்கள்"

என்னும் புஸ்தகமாகும். சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கி, கர்ப்பத் தடை முறைகளை நன்கு விளக்கி, மலட்டுத் தனத்தை முற்றிலும் போக்கி, கணவன்-மனைவி வாழ்க்கையை வெகு உன்னதமாக்கி வைக்கும் அத்தனை இரகசியங்களும் பொதிந்த விஞ்ஞான நூல். ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் தவருது படிக்கவேண்டிய அபூர்வ ஒளஷதம். மலிவுப்பதிப்பு ரூ. 3/12. பரிசுப்பதிப்பு ரூ. 5/8. தபால் செலவு வேறு. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம்—சென்னை 4.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

காமினியா ஆயில்

ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

மதனமஞ்சரி

மாத்திரைகள்.

தேக புஷ்டியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி, ரத்த விருத்தியும், தேக புஷ்டியும் அளிப்பது. டப்பா விலை ரூ. 1—4—0.

ரமணவிலாசினி

வாழ்க்கையை நன்கு அனுபவிக்க டப்பி ரூ. 1—4—0.

கர்ப்பாமிருத சூர்ணம்

ஸ்திரீகளின் நோய்களை நீக்கி, புத்திர சந்தானம் பெற உதவியளிக்கும் ஒளஷதம். டின் விலை ரூ. 2-8-0.

சேலம் : மாடர்ன் ஸ்டோர்ஸ்,
முதல் அக்ரஹாரம்.

கோயமுத்தூர் :
T. S. கருப்புசாமிசெட்டியார் & ஸன்ஸ்

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No 2514.

நிபுணர் ஒரு நடிகர்

மீன் விழுங்கி சாமியார்.

வைரம் வாங்கும் விஷயத்தில் நிபுணரின் யோசனையை எவ்வளவு சுலபமாக காசில்லாமலேயே—பெற விரும்புகிறீர்கள் ?

ஆனால்.........நிபுணர் மட்டும் ஏமாந்தவரா—நடிப்பில் கைதேர்ந்தவருக்கு உங்களை மயக்குவது ஒரு நிமிஷ வேலையே...எல்லாம் மோசடிதான்...... உங்கள் நலனுக்காகவே அவர் தமது நிபுண (!) யோசனையை தயவுடன் வெளியிடுவதாக உங்களை எளிதில் நம்பச்செய்கிறார்.

இந்த ஜோடியின் பொருத்தத்தைக் கவனித்தீர்களா ? ஒன்று — வைரம் வாங்குபவர்; நிபுணரிடம் தமக்குள்ள சொல்ப தொடர்பை உபயோகித்து அவரிடம் இலவச யோசனை பெற விரும்புகிறார். நிபுணரோ வாங்குபவரின் மானஸீகத் தொடர்பை ஞாபகப்படுத்தி தாம் சுயலாபங்கருதாமல் பாரபக்ஷமற்ற யோசனையைக் கூறுவதாக நம்பச்செய்கிறார்!

போலி வேஷத்தில்

நரியும் நாரையும்

நிபுணர் யாதொரு முதலுமின்றி லாபமடிப்பவர்—சரக்குமில்லை யாதொரு பயமுமில்லை. வெறும் ஏமாற்று வார்த்தைகளைக்கொண்டு பிழைப்பவர். அவநம்பிக்கை கொண்டவர்களிடம் நாரையைப்போன்று நடித்துப் பயனடைவது அவரது தப்பு அல்ல.

தரக நிபுணரும், வியாபாரியும் சேர்ந்து உங்கள் பாட்டுக்குத் தகுந்த நாட்டியமாடி. தமது வியாபார தந்திரத்தைக் கையாள்வது சரியே. இதற்கு மூலகாரணம் நீங்களேதான்.

நாணயத்திற்குப் பிரக்யாதி பெற்று நிலைத்து வியாபாரம் செய்யும் நம்பிக்கையான நகை வியாபாரியிடம் நம்பிக்கை வைத்தால்தான் பழுதின்றி வைரம் வாங்குவது சாத்தியம். சுயலாபமே கண்ணாயிருக்கும் தரகரது மோச வார்த்தைகளை நம்பினால் வீணாக உங்கள் பணத்திற்கே நஷ்டத்தை தேடுகிறீர்கள்.

மிக உயர்வான ரகங்கள்!

ஸூரஜ்மல்ஸ்

1895முதல் நாணயத்திற்சிறந்த நகைவியாபாரிகள்

313, எஸ்பிளனேட் — மதராஸ்.